IslamHouse.com

مركز أصول
OsoulCenter
www.osoulcenter.com



# அடிப்படைக் கொள்கையில் சில அத்தியாயங்கள்

## (ஸிரியா நாட்டுச் செய்தி)


ஆக்கம்

**அஷ்ஷேஹ் அப்துல் அஸீஸ் பின் மர்ஸூக் அத்தரீஃபீ**

தமிழில்

**எம். அஹ்மத் (அப்பாஸி)**

மீள்பரிசீலனை

**எம். ஜே. எம் ரிஸ்மி (அப்பாஸி)**


Tamil
தமிழ்
تاميلي

# فصول في العقيدة

## (الرسالة الشامية)

المؤلف

**عبد العزيز بن مرزوق الطريفي**

ترجمة

**أبو عبد الرحمن أحمد بن محمد**

مراجعة

**أبو عبد الله محمد رزمي جنيد**

Tamil
தமிழ்
تاميلي

مركز أصول

Osoul Center

www.osoulcenter.com

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்படும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

+966 504 442 532

+966 11 445 4900

+966 11 497 0126

P.O.BOX 29465 Riyadh 11457

osoul@rabwah.com

www.osoulcenter.com




*அளவற்ற அருளாளனும்*
*நிகரற்ற அன்புடையோனுமாகிய*
*அல்லாஹ்வின் பெயரால்...*

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகவுரை | 9 |
| முதல் அத்தியாயம்: இஸ்லாம்தான் அனைத்து நபிமார்களினதும், நிரந்தரமானதுமான மார்க்கம். | 13 |
| இரண்டாம் அத்தியாயம்: அல்குர்ஆனுக்குரிய விளக்கம் நபிமொழி, நபித்தோழர்களின் விளக்கத்திலிருந்தே பெறப்படும் | 17 |
| மூன்றாம் அத்தியாயம்: அல்லாஹ்வுக்கு அடியார்கள் செய்ய வேண்டிய கடமைகள்......... | 19 |
| நான்காம் அத்தியாயம்: இறைநம்பிக்கை, இறைமறுப்பு, நயவஞ்சகம்.......... | 21 |
| ஐந்தாம் அத்தியாயம்: இறைநம்பிக்கையின் யதார்த்தமும், அதன் உள்ளடக்கமும்............. | 27 |
| ஆறாம் அத்தியாயம்: ஏற்பதுக்கும் மறுப்பதற்கும் இடையில் அல்லாஹ்வின் பெயர்களும் பண்புகளும்......... | 31 |
| ஏழாம் அத்தியாயம்: அல்குர்ஆன் உட்பட அல்லாஹ்வின் வார்த்தைகள். | 35 |
| எட்டாம் அத்தியாயம்: பகுத்தறிவுக்கும் வஹீயுக்கும் இடையிலான தொடர்பு | 39 |
| ஒன்பதாம் அத்தியாயம்: மார்க்க, உலக விடயங்களில் அல்லாஹ்வின் சட்டமியற்றல் சமனானதே. | 43 |
| பத்தாம் அத்தியாயம்: அல்லாஹ்வின் விதியும் நாட்டமும் | 49 |
| பதினோராம் அத்தியாயம்:மரணமும் மறுமை நிகழ்வுகளும் | 53 |
| பன்னிரண்டாம் அத்தியாயம்: தலைமைத்துவமும் கூட்டத்துடன் சேர்ந்திருத்தலும். | 55 |
| பதின் மூன்றாம் அத்தியாயம்: ஜிஹாதும் அதன் வகைகள், நிபந்தனைகளும். | 59 |
| பதிநான்காம் அத்தியாயம்: நபித்தோழர்களின் சிறப்பும், எமது கடமையும். | 61 |
| பதினைன்தாம் அத்தியாயம்: ஒருவனைக் காபிரென்பதன் சட்டமும், குப்ரை உண்டாக்கும் செயல்களும். | 65 |
| பதினாறாம் அத்தியாயம்: அல்லாஹ்வுக்கு மாத்திரம் அடிமையாக இருப்பதே உண்மையான சுதந்திரம். | 67 |

# முகவுரை

புகழனைத்துக்கும் தகுதியான அந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனைப் புகழும் விதங்களும் மட்டிட முடியாது, அவனைப் புகழ்வதும் மட்டிட முடியாது. முதல், இறுதி அனைத்துச் சிறப்புக்களும் அவனுக்கே உரியது.

உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அவனைத் தவிர வேறு யாருமில்லையென நான் சாட்சி பகர்கின்றேன். அவனுக்குப் போட்டியாளனோ, நிகரானவனோ, இணையோ கிடையாது.

மேலும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், தூதருமாவார் என்றும் நான் சாட்சி பகர்கின்றேன். அவர் மீதும், அவரது குடும்பத்தார், தோழர்கள் மீதும் அல்லாஹ் சாந்தியும் சமாதானமும் சொறிவானாக.

இது நான் ஸிரியா மக்களுக்கு எழுதிய சுருக்கமான அடிப்படைக் கொள்கைத் தொகுப்பு. கிறிஸ்துவ காலணித்துவம், அதன் பின் பாதினிய்யாக்களின் (ஷீஆக்களில் மிகத் தீய பிரிவுகளில் ஒன்று) சுமார் ஒரு நூற்றாண்டு கால ஆக்கிரமிப்பு ஆகியவற்றுக்குப் பின்னர் அப்பூமிக்கும் அதன் மனைகளுக்கும் அந்த ஸிரியா மக்களே வாரிஸுக்காரர்கள்.

இவ்விரு ஆக்கிரமிப்புகளைத் தொடர்ந்து சில குழப்பங்களும் இஸ்லாத்தினுள் அடிப்படை, அதன் கிளைகளில் பல மாற்றங்களும் உருவெடுத்தன.

மறுமையில் அடியார்களிடத்தில் வினவப்படும், அல்லாஹ்வுக்கு அடியார்கள் மீதுள்ள கடமைக்கான பதிலை எழுதுமாறு அவ்வூர் மக்களும் ஏனையோரும் கேட்டுக் கொண்டார்கள். அக்கடமையைத்தான் அல்லாஹ் நபி நூஹ் (அலை) அவர்களுக்கும் பின்னர் வந்த நபிமார்களுக்கும் உபதேசித்தான். அதே கடமையை

*வைத்துதான் உம்மி நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட இந்த இஸ்லாமியத்தூதுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. 'நூஹுைக்கு எதை அவன் உபதேசித்தானோ அதையே உங்களுக்கும் மார்க்கமாக்கினான். (முஹம்மதே!) உமக்கு நாம் அறிவித்ததும் இப்ராஹீம், மூஸா மற்றும் ஈஸாவுக்கு நாம் உபதேசித்ததும் "மார்க்கத்தை நிலை நாட்டுங்கள்! அதில் பிரிந்துவிடாதீர்கள்!" என்பதே". (ஷூ ரா: 13).*

*ஆசைகளும், அபிலாசைகளும் அதிகரிக்கும் போது மனோஇச்சைகள் மேலோங்கின. மனோஇச்சைகள் அதிகரிக்க அதிகரிக்க பல வித கருத்துக்கள் உருவாகின. கருத்துக்கள் அதிகரிக்க அதிகரிக்க பல பிரிவுகளும் கூட்டங்களும் அதிகரித்தன. அரபுமொழித்திறன் அரபிகளிடத்திலும் ஏனையோரிடத்திலும் மங்கிய போது பலதரப்பட்ட விளக்கங்களையும் சந்தேகங்களையும் (மக்களிடம்) எளிதாகப் புகுத்த முடிந்தது. அல்குர்ஆன், ஹதீஸ்களில் (அவ்விரண்டையும் விட்டுத்தூரமாக்கும்) பல நியாயப்படுத்தல்களை உருவாக்க முடிந்தது. ஆரம்ப நூற்றாண்டுகளிலேயே எளிதாக இதனை சாதிக்க முடிந்த தென்றால் பிற்காலத்தில் தோன்றியவர்களிடம் இன்னும் எளிதாக சாதிக்கலாம்.*

*ஆசையும் சந்தேகமும் ஒரே நேரத்தில் உருவாக வில்லை. ஏனெனில் சந்தேகம் என்பது முதலில் ஆசையாகத்தான் இருந்தது. பின்புதான் அது சந்தேகமாக உருவெடுத்து, அச்சந்தேகம் பின்னர் பின்பற்றப்படும் ஒரு கருத்தாக மாறுகின்றது. மக்கள் இதன் ஆரம்ப நிலையை (ஆசை) அறியாமல் இறுதி நிலையை எடுத்துக் கொள்கின்றனர். இறைவன் கூறு கின்றான்: "நீங்கள் விரும்பாததைத் தூதர்கள் கொண்டு வந்த போதெல்லாம் பெருமையடித்தீர்கள். சிலரைப் பொய்யரென்றீர்கள். சிலரைக் கொன்றீர்கள்". (பகரா: 87). முதலில் மனோ இச்சையைக் கூறினான். அது பெருமையாக மாறி, பின்பு பொய்ப் பித்தலாகவும் அதன் பின் விரோதமாகவும் மாறியது. இவ்வாறு தான் அனைத்து சமூகங்களிலும் வழிகெட்ட சிந்தனைகளும் பிரிவுகளும் உருவெடுக்கின்றன.*

*அல்லாஹ் தனது நபிக்கு சத்தியத்தையும், நேர்வழியை யும் அருளினான். அதனைத் தூய்மையாகப் பெற விரும்புவோர்*

*மனித சிந்தனைகள் கலங்கப்படுத்த முன்னிருந்த, அதன் ஆரம்ப அடிப்படைகளிலிருந்து அந்த நேர்வழியைப் பெற்றுக் கொள்ளட்டும். (இறைவனிடத்திலிருந்து வரும்) வஹீ தண்ணீரைப் போன்றது. (மனித) சிந்தனைகள் பாத்திரங்களைப் போன்றன. அல்லாஹ் வஹீயை இறக்கி அதனை அவனது தூதர் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் பதித்தான். பின், நபியவர்கள் அதனை ஸஹாபாக்களிடம் வைத்தார்கள். அவர்கள் அதனைத் தாபிஈன்களிடத்தில் வைத்தார்கள். (பாத்திரங்கள்) எந்தளவு வெறுமையாகப் படுகிறதோ அந்தளவு அதில் கலப்படம் அதிகரிக்கும். இப்பாத்திரங்களில் (சிந்தனைகள்) மிகச் சரியானதும், தூய்மையானதும் முதல் பாத்திரமே. அதுதான் நபி (ஸல்) அவர்கள். பின்பு ஸஹாபாக்கள். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ மூஸா அல் அஷ்அரீ (ரலி) கூறினார்கள்: "நான் என் தோழர்களுக்குப் பாதுகாப்பு ஆவேன். நான் போய்விட்டால் என் தோழர்களுக்கு வாக்களிக்கப்பட்டது வந்துவிடும். என் தோழர்கள் என் சமுதாயத்தாருக்குப் பாதுகாப்பு ஆவார்கள். என் தோழர்கள் போய்விட்டால் என் சமுதாயத்தாருக்கு வாக்களிக்கப்பட்டது வந்துவிடும்'' (முஸ்லிம் 2531).*

*எனவே மார்க்கம் அல்குர்ஆன், ஸுன்னாவாகிய வஹீயிலிருந்தே எடுக்கப்படும். "அவனே எழுதப்படிக்காத சமுதாயத்தில் அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பினான். அவர்களுக்கு அவர் அவனது வசனங்களைக் கூறுகிறார். அவர்களைப் தூய்மைப்படுத்துகிறார். அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தை யும் கற்றுக் கொடுக்கிறார்". (ஜும்ஆ: 02).*

*வஹீயை மிகச் சிறந்த முறையில் விளங்கியவர்கள் ஸஹாபாக்களே. நாம், இங்கு வஹீ எடுத்துக் கூறியதையும், அதில் ஸஹாபாக்கள் ஒருமித்து விளங்கிய விளக்கத்தையும், அதில் சிறந்த நூற்றாண்டைச் சேர்ந்த அறிஞர்கள் ஏகோபித்த வற்றையும் கூற இருக்கின்றோம்.*

# முதல் அத்தியாயம்

இஸ்லாம் என்பது, அல்லாஹ்வின் ஒரே மார்க்கம். தன்னுடைய அடியார்களான மனூ, ஜின்களிடமிருந்து வேறெதனையும் மார்க்கமாகஅவன்ஏற்கமாட்டான். “இஸ்லாம்அல்லாதமார்க்கத்தை யாரேனும் விரும்பினால் அவரிடமிருந்து அது ஏற்கப்படாது”. (ஆல இம்ரான் 85) மேலும் கூறுகின்றான்: “அல்லாஹ்விடம் மார்க்கம் என்பது இஸ்லாமே”. (ஆல இம்ரான் 19)

இஸ்லாம் என்பது, அனைத்து நபிமார்களினதும் மார்க்கம். அல்லாஹ் கூறுகின்றான்: “என்னைத் தவிர வணக்கத் திற்குரியவன் யாருமில்லை; எனவே என்னையே வணங்குங்கள்!’’ என்பதை அறிவிக்காமல் உமக்கு முன் எந்தத் தூதரையும் நாம் அனுப்பியதில்லை”. (அன்பியாஃ 25), மேலும் கூறுகின்றான்: ‘நூஹுுக்கும், அவருக்குப் பின் வந்த நபிமார்களுக்கும் தூதுச்செய்தி அறிவித்தது போல் (முஹம்மதே!) உமக்கும் நாம் தூதுச்செய்தி அறிவித்தோம். இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யாகூப், (அவரது) சந்ததிகள், ஈஸா, அய்யூப், யூனுஸ், ஹாரூன், ஸுுலைமான் ஆகியோருக்கும் தூதுச் செய்தி அறிவித்தோம். தாவூதுக்கு ஸபூரை வழங்கினோம். (முஹம்மதே!) இதற்கு முன் சில தூதர்களின் வரலாற்றை உமக்குக் கூறியுள்ளோம். சில தூதர்களின் வரலாற்றை நாம் உமக்குக் கூறவில்லை. அல்லாஹ் மூஸாவுடன் உண்மையாகவே பேசினான். தூதர்களை அனுப்பிய பின்னர் அல்லாஹ்வைக்குறை கூற மனிதர்களுக்கு எந்தச்சான்றும் இருக்கக்கூடாது என்பதற்காக நற்செய்தி கூறி, எச்சரிக்கும் தூதர்களை (அவன் அனுப்பினான்.) அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான்”. (நிஸாஃ 163 – 165).

நூஹ், இப்ராஹீம், இஸ்ஹாக், யஃகூப், தாவூத், ஸுுலைமான், அய்யூப், யூஸுுப்ஃ, மூஸா, ஹாரூன், ஸகரிய்யா, யஹ்யா, ஈஸா, இல்யாஸ், இஸ்மாஈல், அல்யஸஃ, யூனுஸ், லூத் (அலைஹிமுஸ்

ஸலாம்) ஆகிய நபிமார்களை அல்லாஹ் தனது நபிக்குக் கூறி விட்டுப் பின்வருமாறு கூறுகின்றான்: அவர்களுக்கே அல்லாஹ் நேர்வழி காட்டினான். எனவே அவர்களின் வழியை (முஹம்மதே!) நீரும் பின்பற்றுவீராக! (அன்ஆம் 90).

அடிப்படைக் கொள்கையில் அனைத்து நபிமார்களினது மார்க்கமும் ஒருமித்துத்தான் இருக்கின்றது. ஒரு சில கிளைச் சட்டங்களில்- அதுவும் அனைத்திலுமல்ல- வேறுபடுகின்றது. கிளைச்சட்டங்கள் (கால, சமூக மாற்றங்களுக்கேற்ப) மாறும். ஆனால் அடிப்படைகள் மாற மாட்டாது. பனூ இஸ்ரவேலர் களுக்கு அல்லாஹ் மூஸா (அலை), ஈஸா (அலை) ஆகியோரை அனுப்பினான். ஈஸா (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட இன்ஜீல் மூலம் மூஸா (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட தௌராத்திலுள்ள சில விடயங்களை மாற்றினான். நபி ஈஸா (அலை) அவர்கள் தனது கூட்டத்தினரைப் பார்த்து பின்வருமாறு கூறுகின்றார்கள்: "எனக்கு முன் சென்ற தௌராத்தை உண்மைப் படுத்தவும், உங்களுக்குத் தடை செய்யப்பட்டவற்றில் சிலவற்றை உங்களுக்கு அனுமதிக்கவும் உங்கள் இறைவனிடமிருந்து சான்றுடனும் வந்துள்ளேன். எனவே அல்லாஹ்வை அஞ்சுங்கள்! எனக்குக் கட்டுப்படுங்கள்!" (என்றும் கூறினார்.) (ஆலு இம்ரான் 50). மூஸா (அலை), ஈஸா (அலை) ஆகிய இருவரும் ஒரே சமூகத்திற்கு அனுப்பப்பட்டவர்கள். அவ்விருவருடைய மார்க்கங் களிலேயே கிளைச் சட்டங்களில் சில மாற்றங்கள் இருந்தன வென்றால் பலதரப்பட்ட சமூகங்களுக்கு அனுப்பப்பட்ட ஏனைய நபிமார்களின் மார்க்கங்களில் (கிளைச்சட்டங்களில்) மாற்றங்கள் (அல்லாஹ்வால்) செய்யப்படுவதை கேட்கவா வேண்டும்?

பின்னர், எந்த மார்க்கமாக இருந்தாலும் அதில் திரிபுகள் நுழையாமலில்லை. இறைவன் கூறுகின்றான்: அவர்களில் ஒரு பகுதியினர் உள்ளனர். வேதத்தில் இல்லாததை வேதம் என்று நீங்கள் நினைக்க வேண்டும் என்பதற்காக வேதத்தை வாசிப்பது போல் தமது நாவுகளை வளைக்கின்றனர். "இது அல்லாஹ்விட மிருந்து வந்தது" எனவும் கூறுகின்றனர். அது அல்லாஹ்விடமிருந்து வந்ததல்ல. அறிந்து கொண்டே அல்லாஹ்வின் பெயரால் பொய் கூறுகின்றனர்.

*(ஆலு இம்ரான் 78). மேலும் கூறுகின்றான்: வார்த்தைகளை அதற்குரிய இடங்களிலிருந்து மாற்று கின்றனர். (நிஸாஃ 46).*

*எனவே, அல்லாஹ் நாடியது போன்று அப்பொது மக்களுக்கும் சத்தியத்தின் வழிக்குமிடையில் திரை போடப்பட்டது. அதனைச் சீர்திருத்தும் ஒரே வழி புதியொரு நபித்துவமே. எனவே அல்லாஹ் தனது சத்திய மார்க்கத்தை முஹம்மத் (ஸல்) அவர்களை அனுப்புவதன் மூலம் மீட்டெடுத்தான். அதனால் அவர்களுடைய இம்மார்க்கத்தைத் தவிர எந்த வொரு சத்திய இஸ்லாமோ, மார்க்கமோ கிடையாது. "இஸ்லாம் அல்லாத மார்க்கத்தை யாரேனும் விரும்பினால் அவரிடமிருந்து அது ஏற்கப்படாது. அவர் மறுமையில் நட்டமடைந்தவராக இருப்பார்". (ஆலு இம்ரான் 85).*

*அவர்களது இத்தூதுத்துவத்தை மனு, ஜின்கள், அரபிகள், அஜமிகள் (அரபியல்லாதவர்கள்) அனைவருக்குமானதாக ஆக்கியுள்ளான். (முஹம்மதே!) நற்செய்தி கூறுபவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும் மனிதர்கள் அனைவருக்காகவும் உம்மை அனுப்பியுள்ளோம். (ஸபஃ 28). நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: முஹம்மதின் உயிர் யாருடைய கையிலுள்ளதோ அவன் மீது சத்தியமாக! இந்த (இறுதி)ச் சமுதாயத்திலுள்ள யூதரோ கிறிஸ்தவரோ யாரேனும் ஒருவர் என்(மார்க்கத்தி)னைப் பற்றிக் கேள்விப்பட்ட பிறகும் கூட நான் கொண்டுவந்த (மார்க்கத்)தை நம்பிக்கை கொள்ளாமல் இறந்து விட்டால், அவர் நரகவாசிகளில் ஒருவராகவே இருப்பார். (முஸ்லிம் 153.)*

*அல்லாஹ் இக்குர்ஆனை திரிபு, மாற்றங்களை விட்டும் பாதுகாத்துள்ளான். நாமே இந்த இவ்வேதத்தை அருளினோம். நாமே இதைப் பாதுகாப்போம். (ஹிஜ்ர் 9).*

# இரண்டாம் அத்தியாயம்

*இஸ்லாம் என்றால் என்ன? என்பதையும், அதன் மூலம் அல்லாஹ் என்ன நாடுகின்றான்? என்பதையும் அவன் தான் தனது வேதத்திலும் நபியுடைய ஸுன்னாவிலும் விளக்க முடியும். மானிடரில் நபியை விட கண்ணியமான யாரு மில்லை. அவ்வாறிருந்தும் அவர் கூட எத்திவைப்பவராகத்தான் இருந்தார்கள். இறைவன் கூறுகின்றான்: "தூதரே! உமது இறைவனிடமிருந்து உமக்கு அருளப்பட்டதை எடுத்துச் சொல்வீராக!" (மாஇதாஃ 67). எத்திவைப்பதுடன் அதனைத் தெளிவு படுத்துவதும் அவருடைய பொறுப்பாகும். அல்லாஹ் கூறுகின்றான்: "தெளிவாக எடுத்துச் சொல்வது தவிர இத்தூதரின் மீது வேறு (கடமை) இல்லை". (நூர் 54). அத்தெளிவு கூட அல்லாஹ் விடமிருந்துதான் வருகின்றது. "எனவே நாம் அதை ஓதும்போது அந்த ஓதுதலைப் பின்பற்றுவீராக! பின்னர் அதைத் தெளிவு படுத்துவது நம்மைச் சேர்ந்தது". (கியாமாஃ 18, 19).*

*ஸுன்னாவும் அல்லாஹ்விடமிருந்து தனது தூதருக்கு வரும் வஹீதான். "அவர் மனோ இச்சைப்படிப் பேசுவதில்லை, அது அறிவிக்கப்படும் செய்தியைத் (வஹீ) தவிர வேறில்லை". (நஜ்ம் 3, 4). நபியிடத்தில் ஒரு வினா தொடுக்கப்பட்டு, அதற்குரிய பதில் ஏற்கனவே அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்தால் கூறுவார்கள். இல்லாவிடில் வஹீயை எதிர்பார்த்திருப்பார்கள்.*

*நபியுடைய வார்த்தைகளை விளங்குவதில் மிக நெருக்க முடையவர்கள் அன்னாருடைய தோழர்களே. அல்குர்ஆனுக்கு அவர்கள் வழங்கும் விளக்கம் (வஹீக்கு முரண்படாமலிருக்கும் வரை) ஆதாரமாகக் கொள்ளப்படும். மார்க்க விடயத்தில் ஹராம், ஹலாலைத் தீர்மானிக்க அல்லாஹ்வன்றி வேறொருவரும் உள்ளார் என்று யாராவது கூறினால் அவர் அல்லாஹ்வுடைய சட்டதிட்டங்களில் அவனுக்கு இணை வைத்துவிட்டவர் என்பதே அர்த்தம். இது தெளிவான இறைநிராகரிப்பு (குப்ரு), இணை வைப்பு (ஷிர்க்) என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.*

*தனது வார்த்தைகளுக்குத் தான் விரும்பும் ஒரு கருத்தை வைத்தே தவிர அல்லாஹ் தனது வேதத்தை இவ்வுலகிற்கு இறக்கவில்லை. அவன் நாடும் அக்கருத்தை அவனும், படைப்பினங்களில் அவன் அனுமதிப்பவர்களும் தான் விளக்க முடியும். அல்குர்ஆனை சுயமாக ஆராயும் ஒருவர் பின்வரும் இரு நிபந்தனைகளுடனேயே தனது கருத்தை முன் வைக்கலாம்:*

1. *அக்கருத்து, தனிச்சொல்லிலோ, கூட்டு வார்த்தைகளிலோ அரபு மொழியையும் அதன் உரைநடை, மொழியியல் நிலையையும் விட்டும் வெளிப்படாமலிருக்க வேண்டும்.*

2. *அல்குர்ஆனில் நேரடியாகக் கூறப்பட்டுள்ள விளக்கத்துக்கு இவரது விளக்கம் முரண்படாமலிருக்க வேண்டும்.*

*அல்லாஹ்வின்பால் சேர்க்கப்படும் எல்லாக் கருத்துக்களும் அவனுக்குரியதல்ல. இருகருத்துக்களுக்கு இடம்பாடான (முதஷாபிஹ்) வசனங்களை முறிப்பதற்காக சிரமப்பட்டு (சம்பந்தமற்ற) விளக்கங்களை கொடுத்து, ஒரு கருத்தை மாத்திரம் குறிக்கும் (முஹ்கம்) வசனங்களைத் தம் பக்கம் சாய்த்துக் கொண்டதால் வேதக்காரர்கள் வழிகெட்டுப் போனார் கள். அவர்களைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: "அவர்களில் ஒரு பகுதியினர் உள்ளனர். வேதத்தில் இல்லாததை வேதம் என்று நீங்கள் நினைக்க வேண்டும் என்பதற்காக வேதத்தை வாசிப்பது போல் தமது நாவுகளை வளைக்கின்றனர். "இது அல்லாஹ்விடமிருந்து வந்தது'' எனவும் கூறுகின்றனர். அது அல்லாஹ்விடமிருந்து வந்ததல்ல. அறிந்து கொண்டே அல்லாஹ் வின் பெயரால் பொய் கூறுகின்றனர்". (ஆல இம்ரான் 78). அல்லாஹ் இங்கு "வேதத்தை வாசிப்பது போல் தமது நாவுகளை வளைக்கின்றனர்'' என்றுதான் கூறுகின்றான். வேதத்தைத் தவிர வேறொன்றைக் கூறவில்லை. "நீங்கள் நினைக்க வேண்டும் என்பதற்காக'' என்பதன் விளக்கம் இவர்களுடைய இச்செயல் வேதவசனத்திற்கு மிக நெருக்கமாக இருப்பதால் மக்களை வழி கெடுப்பதில் தீவிரம் காட்டுவதற்காகவே அவ்வாறு நடந்து கொள் கின்றனர்.*

# மூன்றாவது அத்தியாயம்

அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமை: சகல வணக்கங்களையும் அவனுக்கு மாத்திரம் செலுத்துவதே பிரதான கடமையாகும். அல்லாஹ் கூறுகின்றான்: "உங்கள் வணக்கத்திற் குரியவன் ஒரே ஒரு இறைவனே. அவனைத் தவிர வணக்கத்திற் குரியவன் யாருமில்லை. (அவன்) அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன்". (பகரா 163). அத்துடன் உள்ளம், நாவு, ஏனைய உறுப்புக்களால் செய்யும் செயற்பாடுகளில் அவனுக்கு யாரையும் கூட்டாக்காமலிருப்பதும் கடமையாகும். அல்லாஹ் கூறுகின் றான்: "அல்லாஹ்வை வணங்குங்கள்! அவனுக்கு எதையும் இணையாகக் கருதாதீர்கள்! ". (நிஸாஃ 36).

பெரிய இணைவைப்பு மனிதனிடமுள்ள எந்தவொரு நன்மையையும் விட்டுவைக்க மாட்டாது. (அழித்து விடும்). "நீர் இணை கற்பித்தால் உமது நல்லறம் அழிந்து விடும்; நீர் நட்டமடைந்தவராவீர். என்று (முஹம்மதே!) உமக்கும், உமக்கு முன் சென்றோருக்கும் தூதுச் செய்தி அறிவிக்கப்பட்டது". (ஸுமர் 65). இது இறைவன் தனது நபி முஹம்மத் (ஸல்) அவர்களைப் பார்த்துக் கூறியது. அப்படியாயின் ஏனையோர் நிலைதான் என்ன?

அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினாலே ஒளிய அவன் தனது அடியானிடமிருந்து இணைவைத்தலை மன்னிக்க மாட்டான். "தனக்கு இணைகற்பிக்கப்படுவதை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். அதற்குக் கீழ் நிலையில் உள்ள (பாவத்)தை, தான் நாடியோருக்கு மன்னிப்பான்". (நிஸாஃ 48). மேலும் கூறுகின்றான்: "(ஏகஇறைவனை) மறுத்து அல்லாஹ் வின் பாதையை விட்டும் தடுத்துப் பின்னர் மறுப்போராகவே மரணித்து விட்டவர்களை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான்". (முஹம்மத் 34).

குப்ருடன் மரிப்பவர் நரகில்தான் இருப்பார். அல்லாஹ்

*கூறுகின்றான்: "உங்களில் தனது மார்க்கத்தை விட்டும் மாறி (ஏகஇறைவனை) மறுப்போராக மரணித்தவரின் செயல்கள் இவ்வுலகிலும், மறுமையிலும் அழிந்து விடும். அவர்கள் நரக வாசிகள். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள்". (பகரா 217), மேலும் கூறுகின்றான்: "(ஏகஇறைவனை) மறுத்து, மறுத்த நிலையிலேயே மரணித்தோர் மீது அல்லாஹ்வின் சாபமும் வானவர்கள் மற்றும் அனைத்து (நல்ல) மனிதர்களின் சாபமும் உள்ளது". (பகரா 161).*

*சிலவேளை ஒரு காபிர் தனது வாழ்நாளில் மக்களுக்குப் பயனளிப்பவனாக இருப்பான். இது அல்லாஹ் மக்களுக்கு அவனை வசப்படுத்திக் கொடுக்கும் ஒரு வாய்ப்பு. எவ்வாறு சூரியன், சந்திரன், காற்று, மேகங்களை வசப்படுத்திக் கொடுத் தானோ அதுபோன்று தான் இதுவும். இன்னும் சொல்லப் போனால் இந்தக் காபிரை விட அப்படைப்பினங்கள் மக்களுக்கு அதிக பயனளிக்கக் கூடியவையாக உள்ளன. ஏனெனில் குப்ரு என்பது அல்லாஹ்வை மறுப்பதினால்தான் நிகழுமே தவிர இயற்கையை மறுப்பதினாலல்ல. தண்டனை அல்லாஹ்வை மறுப்பதினால்தான் நிகழுமே தவிர இயற்கையை மறுப் பதினாலல்ல.*

# நான்காம் அத்தியாம்

*ஈமான், குப்ரு: இவ்விரண்டும் இரு பெயர்கள். இரண்டிற்கும் வெவ்வேறு சட்டங்களுள்ளன. அவ்விரு சட்டங்களையும் அல்லாஹ் மாத்திரம்தான் இறக்குவான். தெளிவான ஆதாரமின்றி யாரும் காபிராக்கப்பட முடியாது. இப்பூமியிலுள்ள மக்கள் இரு பிரிவினர். மூன்றாம் பிரிவொன்று கிடையாது. ஒன்று முஃமீன்கள் (நம்பிக்கையாளர்கள்), மற்றது காபிர்கள் (இறை மறுப்பாளர்கள்). அல்லாஹ் கூறுகின்றான்: "அவனே உங்களைப் படைத்தான். உங்களில் (ஏக இறைவனை) மறுப்போரும் உள்ளனர். உங்களில் நம்பிக்கை கொண்டோரும் உள்ளனர்". (தஃகாபுன் 02). இவ்விரு பிரிவினருக்குமுரிய சட்டதிட்டங்கள் அல்லாஹ் அவனது வேதத்திலும், தனது நபியின் ஸுன்னாவிலும் இறக்கியவைதான்.*

## முனாபிக்குகளைப் (நயவஞ்சகர்கள்) பொறுத்தவரை அவர்கள்:

- *ஒன்றோ இறைமறுப்பை மறைத்து, விசுவாசத்தை வெளிக் காட்டும் காபிர்கள். அல்லாஹ், அவனது வேதம், தூதர்களை வெளிரங்கத்தில் ஏற்று, உள்ளத்தால் அவர்களைப் பொய்ப்பிப் பவனைப் போன்றவன். இதுவே பெரிய நயவஞ்சகம் எனப் படுகின்றது.*

- *அல்லது பாவங்களை மறைத்து, வழிப்படுதலை மாத்திரம் வெளிக்காட்டும் முஸ்லிம்கள். துரோகத்தை மறைத்து, வாக்குறுதியை நிறை வேற்றுபவன் போலவும், பொய்யை மறைத்து உண்மை பேசுபவன் போலவும் காட்டிக் கொண்டிருப்பவன். இதுவே சிறிய நயவஞ்சகம் எனப்படு கின்றது. இவ்வாறான முனாபிக்குகளை அவர்களிடமிருந்து வெளிப்படும் செயற்பாடுகளை வைத்தே வெளிரங்கத்தில் நடாத்தப்படும். உள்ளத்திலுள்ளவற்றுக்குப் பொறுப்பாளன் அல்லாஹ்வே.*

*ஒரு முஃமினின் உயிர், உடமைகளில் அடிப்படை, அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே. நிராகரிப்பாளனின் நிலை அதற்கு மாற்றமானதே. எனினும் இது பொதுச்சட்டம் கிடையாது. சிலவேளை, காபிர்களில் இஸ்லாமிய அரசாங்கத்துக் கீழ் ஒப்பந்தம் செய்துள்ளவர்கள், முஸ்லிம்களால் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டவர்கள், தண்டப்பணம் செலுத்திக் கொண்டிருப்பவர்கள் போன்றோர் காபிர்களாக இருந்தாலும் அவர் களது உயிர், உடமைகள் பாதுகாக்கப்படும். மறுபுறம், கொலை, திருமணத்திற்குப்பின் செய்த விபச்சாரம் போன்ற காரணங் களுக்காக முஸ்லிம்களாக இருந்தாலும் அவர்களது உயிர்கள் பறிக்கப்படும்.*

## அல்லாஹ்வும் அவனது தூதரும் காபிராக்காத யாரும் காபிராக்கப்பட மாட்டார்கள். அவ்வாறு காபிராக்கப்பட்டவர்களில் சிலர்:

- *அல்லாஹ்வையோ அவனது தூதரையோ பொய்ப்பித்த வர்கள்.*
- *அவ்விருவரையும் பரிகாசித்தவர்கள். இறைவன் கூறுகின் றான்: "அல்லாஹ்வையும், அவனது வசனங்களையும், அவனது தூதரையுமா கேலி செய்து கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்பீராக! சமாளிக்காதீர்கள்! நம்பிக்கை கொண்ட பின் (நம்மை) மறுத்து விட்டீர்கள். உங்களில் ஒரு சாராரை நாம் மன்னித்தாலும், மற்றொரு சாராரை அவர்கள் குற்றம் புரிந்து கொண்டிருந்ததால் தண்டிப்போம்". (தௌபா 65, 66).*
- *அவ்விருவருக்கும் வழிப்படாமல் வேண்டுமென்றே மாறு செய்தல்.*
- *இஸ்லாமிய சட்டதிட்டங்களில் உறுதியனவற்றையும் மறுத்தல்.*
- *அல்லாஹ்வின் மீது பொய்யுரைத்தல். இறைவன் கூறுகின் றான்: "அல்லாஹ்வின் வசனங்களை நம்பாதோரே பொய்யை இட்டுக் கட்டுவார்கள். அவர்களே பொய்யர்கள்". (நஹ்ல் 105), மேலும் கூறுகின்றான்: "அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டுபவனை விட அல்லது தன்னிடம் வந்த உண்மையைப் பொய்யெனக் கருதியவனை விட அநீதி*

இழைத்தவன் யார்? (ஏகஇறைவனை) மறுப்போருக்கு நரகத்தில் தங்குமிடம் இல்லையா?" (அன்கபூத் 68). இவ்வசனத்தில் அநீதி என்பதற்கு இறைமறுப்பு என விளக்க மளிக்கப்பட்டுள்ளது.

- அல்லாஹ் அல்லாதோருக்கு வணக்கத்தை செலுத்துதல். அல்லாஹ் கூறுகின்றான்: "அல்லாஹ்வுடன் வேறு கடவுளை யாரேனும் அழைத்தால் அவனிடம் அது குறித்து எந்தச் சான்றும் இல்லை. அவனை விசாரிப்பது அவனது இறைவனிடமே உள்ளது. (ஏகஇறைவனை) மறுப்போர் வெற்றி பெற மாட்டார்கள்". (முஃமினூன் 117). அவ்வணக்கம் முழுமையாக அல்லாஹ் அல்லாதோருக்கு செலுத்துதப் பட்டாலும், அல்லாஹ்வை நெருங்குவதற்காக ஏனைய கடவுள்களை துணைக்கு வைத்துக் கொண்டாலும் சரியே. இவை அனைத்தும் இறைமறுப்புத்தான். அல்லாஹ் கூறுகின்றான்: "அல்லாஹ்வையன்றி அவர்களுக்குத் தீமையும், நன்மையும் செய்யாதவற்றை வணங்குகின்றனர். "அவர்கள் அல்லாஹ்விடம் எங்களுக்குப் பரிந்துரைப்பவர் கள்'' என்றும் கூறுகின்றனர். "வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ்வுக்குத் தெரியாததை அவனுக்குச் சொல்லிக் கொடுக்கிறீர்களா? அவன் தூயவன். அவர்கள் இணை கற்பிப்பதை விட்டும் உயர்ந்தவன்'' என்று கூறுவீராக!". (யூனுஸ் 18).

- அல்லாஹ்வுக்கு மாத்திரம் சொந்தமானவற்றைப் பிறருக்கு வழங்கல். ஒரு விடயத்தை மார்க்கமயப்படுத்தல், சட்ட திட்டங்களில் ஹராம், ஹலால் தீர்மானிக்கும் அதிகாரம் அனைத்தும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவையே. அவ்வாறு நம்பிக்கை கொள்வதை வணக்கமாகக் கூறி யுள்ளான். "அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர எவருக்கும் இல்லை. அவனைத் தவிர எதையும் நீங்கள் வணங்கக் கூடாது என்று அவன் கட்டளையிட்டுள்ளான்". (யூஸுப்ஃ 40).

- சூனியம், ஜோதிடம் போன்று அல்லாஹ் அல்லாதோருக்கு மறைவான அறிவிருப்பதாக வாதாடுவது. இறைவன் கூறு கின்றான்: "வானங்களிலும், பூமியிலும் மறைவானதை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிய மாட்டார்கள்". (நம்ல் 65).

- பிரபஞ்சத்தைப் படைத்தல், நிர்வகித்தல், வாழ்வு, மரணம் போன்றன பிறராலும் செய்ய முடியுமெனக் கருதுதல். அல்லாஹ் கூறுகின்றான்: "அல்லாஹ்வுக்கு நிகரானவர்களைக் கற்பனை செய்து விட்டார்களா? அவர்கள் அல்லாஹ் படைத்ததைப் போல் படைத்து, அதன் காரணமாக படைத்தது யார்? என்று இவர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டு விட்டதா? ஒவ்வொரு பொருளையும் அல்லாஹ்வே படைத்தவன்; அவன் தனித்தவன்; அடக்கியாள்பவன்'' என்று கூறுவீராக!". (ரஃத் 16).

- அதேபோன்றுதான் விசுவாசிகளை விட்டுவிட்டு காபிர்களைத் தனது நேசர்களாகவும், உதவியாளர்களாகவும் எடுத்துக் கொண்டவன். அல்லாஹ் கூறுகின்றான்: "உங்களில் அவர்களைப் பொறுப்பாளராக்கிக் கொள்வோர் அவர்களைச் சேர்ந்தவரே". (மாஇதாஃ 51) .

இஸ்லாத்தை அறிவதற்கு வாய்ப்பிருந்தும் கற்காமல் புறக்கணித்தால் அவனும் காபிராகி விடுகின்றான். உண்மையில் அவன் அறிவிலியாக இருந்தாலும் சரியே. ஏனெனில் இவனது அறியாமை நீக்க முடியுமானது. அவ்வாறிருந்தும் அதை அவன் நீக்கவில்லை. இதனால்தான் அல்லாஹ் இணை வைப்பாளர் களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றான்: "எனினும் அவர்களில் பெரும்பாலோர் உண்மையை அறிய மாட்டார்கள். அவர்கள் புறக்கணிப்பவர்கள்". (அன்பியாஃ 24). அவர்கள் அறிவீனர்கள் என்றும், தமது சுய விருப்பத்துடனேயே இவ்வாறிருப்பதாகவும் கூறுகின்றான். மேலும் கூறுகின்றான்: "(நம்மை) மறுப்போர் தமக்கு எச்சரிக்கப்பட்டதைப் புறக்கணிக்கின்றனர்". (அஹ்காப்ஃ 03). சத்தியத்தைக் கேட்கும் போதே அதனைப் புறக்கணித்து விட்டு, அதன் விரிவான விடயங்களை ஒருவன் அறியாமலிருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு காரணமல்ல. இந்நிலைதான் பல சமூகங்களுடைய வழிகேட்டிற்குப் பெரும் பங்காற்றுகின்றது. ஏனெனில் அவர்கள் சத்தியத்தின் ஒரு பகுதியைக் கேட்டுவிட்டு, அதன் விரிவான விடயங்களை அறியாதவர்கள் போன்று நடித்துப் புறக்கணித்து விடுகின்றனர்.

எனவே உலக, மார்க்க அத்தாட்சிகளைப் பொருட்படுத்தாமலிருப்பது காபிர்களில் அதிகமானோரின் குணமாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

"வானங்களிலும், பூமியிலும் எத்தனையோ சான்றுகள் உள்ளன. அவற்றைப் புறக்கணித்தே அவர்கள் கடந்து செல்கின்றனர்". (யூஸுப்ஃ 105). மேலும் கூறுகின்றான்: "மாறாக அவர்களுக்கு அவர்களின் அறிவுரையையே வழங்கியுள்ளோம். அவர்கள் தமது அறிவுரையைப் புறக்கணிக் கின்றனர்". (முஃமினூன் 71).

ஓரளவு அறிவுடன் (முழுமையாக அறியாமல்) புறக்கணிப்பது மக்களுக்கு மத்தியிலுள்ள உரிமை, கடமைகளிலிருந்தே ஒருவனை விடுவிக்க மாட்டாதெனின், அல்லாஹ்வுக்குச்செய்ய வேண்டிய கடமையிலிருந்து எவ்வாறு தன்னை விடுவித்துக் கொள்வான்?

மனித புத்தி அல்லாஹ்வின் அத்தாட்சி, வசனங்களில் தாமதித்து நின்று ஆராயாமல் போனால், அதன் வேகத்துக் கமைய அவற்றிலுள்ள உள்நோக்கங்கள், கருத்துக்கள் தவறி விடும். நாளாந்தம் காணப்படும் பலம் வாய்ந்த அத்தாட்சியாக வானம் இருந்தாலும் கூட அதனால் பயனடைய முடியாது. "வானத்தைப் பாதுகாக்கப்பட்ட முகடாக்கினோம். அவர்களோ அதில் உள்ள சான்றுகளைப் புறக்கணிக்கின்றனர்". (அன்பியாஃ 32).

சத்திய மார்க்கத்தின் விரிவான விடயங்களைப் புறக் கணித்து, தனக்குப் பின்புறம் போட்டுக் கொண்டாலும், அதன் பின்விளைவிலிருந்து (மேலோட்டமான அறிவு) அவனைக் காத்து விடும் என்று நம்பும் மனிதன் இங்கு தவறிழைக் கின்றான்.

இவ்வாறு புறக்கணிக்கக் காரணம், ஒன்றோ பெருமை, அல்லது வீண்களியாட்டங்களும், உலக இன்பங்களை அனுபவித் தலுமாகும். இதனால்தான் அவனுக்கு சோதனைகள் வரும் போது அவை அவனுடைய பெருமையைப் போக்கிவிடுகின்றது. அவன் அனுபவித்த இன்பங்களை இழக்கச் செய்து விடுகின்றது. சத்தியத்தை அறிந்து அதன்பால் மீண்டு விடுகின்றான்.

# ஐந்தாம் அத்தியாயம்

இறைநம்பிக்கை: இது சொல், செயல், எண்ணம் மூன்றையும் உள்ளடக்கும் ஒரு விடயமாகும். எவ்வாறு 3 ரக்அத்களைக் கொண்ட மஃரிப் தொழுகையில் ஒரு ரக்அத் குறைந்தாலும் அதற்கு மஃரிப் என்று சொல்லப்படமாட்டாதோ, அதேபோன்றுதான் ஈமானின் (இறைநம்பிக்கை) இம்மூன்றில் ஒன்று குறைந்தாலும் அதற்கு ஈமான் என்று சொல்லப்பட மாட்டாது.

இவ்வாறு நாம் கூறும் ஈமானின் இம்மூன்று விடயங்களின் உண்மைநிலை என்னவெனில், இவை முஹம்மத் (ஸல்) அவர்களுடைய மார்க்கத்திற்கு மாத்திரம் சொந்த மானவை. மக்களுக்கு நலவு செய்வதை விரும்புவதும், வன் நெஞ்சத்திலிருந்து விடுபடுவதுமல்ல உள்ளத்தால் வைக்கும் நம்பிக்கை. ஏனெனில் இது, படைப்பாளனை மறுக்கும் நாத்திகன் உட்பட பலரும் விரும்பும் ஒரு விடயம். ஆனால் உள்ளத்தில் வைக்கும் நம்பிக்கை என்பது அதனைப் பிரதிபலிக்கும் வார்த்தை மற்றும் செயல்களே.

உள்ளத்தைப் பிரதிபலிக்கும் வார்த்தை என்பது: உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதர் என்றும், அவர்கள் கொண்டு வந்த இம்மார்க்கம் தான் சத்தியமானது என்றும் உள்ளத்தால் உண்மைப்படுத்துவதுடன் நாவினால் மொழிய வேண்டும்.

உள்ளத்தைப் பிரதிபலிக்கும் செயல் என்பது: அல்லாஹ்வையும், அவனது தூதர்களையும், இஸ்லாத்தையும் நேசிப்பதுடன், அவ்விருவரும் நேசிப்பவற்றையும் நேசிக்க வேண்டும். அத்துடன் அனைத்து வணக்க வழிபாடுகளையும் அவனுக்கு மாத்திரமே செலுத்த வேண்டும்.

இங்கு (உள்ளத்தைப் பிரதிபலிக்கும்) வார்த்தையானது

உண்மை பேசுதல், பெற்றோருடன் கனிவாகப் பேசுதல், ஸலாம் கூறிக்கொள்ளல், பாதை தவறியோருக்கு வழிகாட்டல் போன்ற பொதுவான நல்ல வார்த்தைகளுடன் சுருங்கிட மாட்டது. ஏனெனில் இவையனைத்தும் அல்லாஹ்வைத் தெளிவாக மறுக்கும் காபிர்களும் விரும்பும் அம்சங்கள். அப்படியாயின் அதன்மூலம் நாடப்படுவது இம்மார்க்கம் பிரத்தியேகமாக அறிமுகப்படுத்திய மேலதிகமான வார்த்தைகள். அவற்றில் மிக உயர்ந்தவை இரு சாட்சியங்களை மொழிவதும், தஸ்பீஹ், தக்பீர் அதிமாகச் சொல்வதுமாகும்.

மேலும் (உள்ளத்தைப் பிரதிபலிக்கும்) செயலானது பெற்றோரை உபசரித்தல், பாதையில் தீங்கிழைப்பவற்றை அகற்றல், ஏழைக்கு உணவளித்தல், அநீதியிழைக்கப்பட்டவனுக்கு உதவுதல், விருந்தாளிகளைக் கண்ணியப்படுத்தல் போன்ற நற்காரியங்களில் மாத்திரம் சுருங்கிட மாட்டாது. ஏனெனில் இவையனைத்தும் இறை நம்பிக்கையில்லாமலும் மக்களால் விரும்பப்படுபவையே. அப்படியாயின் அதன்மூலம் நாடப்படுவது இம்மார்க்கம் பிரத்தியேகமாக அறிமுகப்படுத்திய தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் போன்ற மேலதிகமான வணக்க வழிபாடுகள்.

அல்லாஹ்வால் அருளப்பட்ட அனைத்து மார்க்கங்களும் கூட்டுச் சேருவதுடன், இயற்கைச் சுபாவமும் உணர்த்தக்கூடிய மக்களுக்கு நலவு நாடுதல், உண்மையுரைத்தல், பெற்றோரை உபசரித்தல், ஏழைக்கு உணவளித்தல், பாதையில் தீங்கிழைப் பவற்றை அகற்றல், போன்ற நற்காரியங்கள் அவை அல்லாஹ் வுக்காக மாத்திரம் உளத்தூய்மையுடன் செய்யப்படும் போது ஈமானை அதிகரிக்கின்றன. எனினும் அக்காரியங்கள்தான் ஈமானின் அளவுகோல் என்பது கிடையாது. அவற்றைச் செய்தால் ஈமான் உண்டு, செய்யாவிட்டால் ஈமானில்லை என்பது கிடையாது. மாறாக இதனைச் செய்பவருடைய இயற்கைச் சுபாவம் சரியாகத்தானுள்ளது, மனிதநேயம் இன்னும் மாறவில்லை என்பவற்றையே இச்செயல்கள் உறுதிப்படுத்துகின்றன. அவை இவர் சத்தியத்தை ஏற்க மிக நெருக்கமாக இருக்கின்றன. "இதன் மீதே மனிதர்களை அல்லாஹ் அமைத்துள்ளான்". (ரூம் 30) .

இறைநம்பிக்கை கூடிக், குறைவதுடன் சிலவேளை அறவே

நீங்கியும் விடக்கூடியது. அல்லாஹ்வுக்கு வழிப்படுவதன் மூலம் கூடவும், அவனுக்கு மாறு செய்வதன் மூலம் குறையவும் செய்கின்றது. இறைமறுப்பு, இணைவைப்பின் மூலமே தவிர முற்றாக நீங்க மாட்டாது. இறைவன் கூறுகின்றான்: "நம்பிக்கை கொண்டோர் யார் எனில் அல்லாஹ்வைப்பற்றிக் கூறப்பட்டால் அவர்களின் உள்ளங்கள் நடுங்கும். அவனது வசனங்கள் அவர்களுக்குக் கூறப்பட்டால் அது அவர்களின் நம்பிக்கையை அதிகப்படுத்தும்". (அன்பால் 02), மேலும் கூறுகின்றான்: "நம்பிக்கை கொண்டோர் நம்பிக்கையை அதிகமாக்கிக் கொள்ளவும்" (முத்தஸ்ஸிர் 31), மேலும் கூறுகின்றான்: "தமது நம்பிக்கையுடன் மேலும் நம்பிக்கையை அதிகமாக்கிக் கொள்வதற்காக அவனே நம்பிக்கை கொண் டோரின் உள்ளங்களில் நிம்மதியை அருளினான்". (பத்ஹ் 04).

**இறைமறுப்புக்குப் பின் பின்வருவனவற்றின் மூலமே தவிர ஈமான் மீண்டும் நிலைபெற மாட்டாது:**

- இம்மார்க்கத்தை உள்ளத்தால் உண்மைப்படுத்தி, அல்லாஹ் வையும், அவனது தூதரையும் நேசிப்பதுடன், அவ்விருவரும் நேசிப்பவற்றையும் நேசிக்க வேண்டும்.
- பின்பு (இரு சாட்சியங்களையும்) நாவினால் மொழிய வேண்டும்.
- பின்பு அதற்கேற்ப ஏனைய உறுப்புக்களால் மார்க்கத்தை அமுல்படுத்த வேண்டும்.

உள்ளத்தால் உண்மைப்படுத்தி, நாவினால் மொழியும் சந்தர்ப்பம் கிடைத்தும் மொழியாதவர் விசுவாசி கிடையாது.

உள்ளத்தால் உண்மைப்படுத்தி, நாவினால் மொழியும் சந்தர்ப்பம் கிடைத்து, நபியவர்கள் கொண்டு வந்த இம்மார்க் கத்தை அமுல்படுத்தும் சந்தர்ப்பம் கிடைத்தும் செய்யாதவர் விசுவாசி கிடையாது.

மொழிவதற்கோ, செயற்படுத்தவோ விரும்பி, அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காதவரைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு

கூறுகின்றான்: "எவரையும் அவரது சக்திக்குட்பட்டே தவிர அல்லாஹ் சிரமப்படுத்த மாட்டான்" (பகரா 286), மேலும் கூறுகின்றான்: "அல்லாஹ் எதைக் கொடுத்துள்ளானோ அதற்கு மேல் எவரையும் சிரமப்படுத்த மாட்டான்". (தலாக் 7).

சொல், செயல், நம்பிக்கை சார்ந்த ஈமானை முறிக்கும் காரியத்தில் ஒருவர் ஈடுபட்டால் அவரது ஈமான் முற்றாக நீங்கி விடும். ஏனெனில் இம்மூன்றும் மஃரிப் தொழுகையின் 3 ரக்அத்களைப் போன்றவை. தொழுகையில் ஏதாவதொரு ரக்அத்தில் அதனை முறிக்கும் செயலைச் செய்தால்- ஏனைய ரக்அத்களைத் திறன்படச் செய்தாலும்- அத்தொழுகை முறிந்து விடும். அவ்வாறுதான் ஈமானுடைய மேற்சொன்ன 3 விடயங் களும். எனினும் ஈமான் ஏற்றத் தாழ்வை சந்திக்கும் என்று நாம் ஏற்கனவே கூறியதற்கு இது முரணாகமாட்டாது. தொழுகையில் நீண்ட நேரம் நிலைத்திருத்தல், உள்ளச்சம், குர்ஆன் ஓதுதல் போன்றவற்றால் அதன் தரம் அதிகரிக்கின்றது. அவ்வாறுதான் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதன் மூலம் ஈமானும் அதிகரிக்கின்றது. தொழுகையில்- அதனை முறிக்காத- வானத்தை அண்ணார்ந்து பார்த்தல், நாய் போன்று கைகளை விரித்து வைத்தல் போன்ற தடைசெய்யப்பட்டதைச் செய்வதன் மூலம் அதன் தரம் குறைகின்றது. ஆனால் முறியாது. அதேபோன்று தான் ஈமானை முறிக்காத பாவங்களைச் செய்யும் போது அந்த ஈமானில் குறை ஏற்படுகின்றது. ஆனால் முறியாது. அல்லாஹ் நிர்ணயித்தவற்றைத் தவிர ஈமானை முறிப்பவை கிடையாது. அவன் நிர்ணயித்ததைத் தவிர தொழுகையை முறிப்பவை எதுவும் கிடையாது.

# ஆறாம் அத்தியாயம்

*அல்லாஹ்வுக்கு உயர்வான பண்புகளும், அழகான பெயர்களும் பல உள்ளன. அல்லாஹ்வைப்பற்றி அவனைத் தவிர மிக அறிந்தவர் யாருமில்லை. எனவே குர்ஆனிலும், ஸுன்னாவிலும் தனக்கு என்னென்ன பண்புகள் இல்லையென மறுத்துள்ளானோ அவற்றை நாமும் மறுக்க வேண்டும். எவை யெல்லாம் இருப்பதாக உறுதிப்படுத்தியுள்ளானோ அவற்றை நாமும் ஏற்று உறுதி கொள்ள வேண்டும். அனைத்துக்குறைகளையும் விட்டும் அவன் தூய்மையானவன் என ஏற்க வேண்டும். ஒவ்வொரு குறையாக எடுத்துக்கூறி மறுக்கத்தேவையில்லை. பொதுவாக மறுத்தால் போதுமானது. அவனுக்கு இருக்கும் பண்புகளை ஏற்கும் போது (விளாவாரியாக) ஒவ்வொன்றாக ஏற்க வேண்டும். அவற்றுக்கு விதம் கற்பிக் கவோ, உவமைப் படுத்தவோ, உதாரணம் கூறவோ கூடாது.*

*என்னென்ன குறைகளை விளாவாரியாக மறுத்துள்ளானோ அவற்றை நாமும் விளாவாரியாக மறுத்து அவனைத்துதிக்க வேண்டும். உதாரணமாக அல்லாஹ் தனக்கு மனைவி, குழந்தைகள் இல்லையென மறுக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான்: ''அவனுக்கு மனைவி இல்லாத நிலையில் அவனுக்கு எவ்வாறு பிள்ளை இருக்க முடியும்?'' (அன்ஆம் 101), மேலும் கூறுகின்றான்: ''(யாரையும்) அவன் பெறவில்லை. (யாருக்கும்) பிறக்கவுமில்லை''. (இஃலாஸ் 3). அதேபோன்று யூதர்கள் தன்னைக் கஞ்சன் என்று கூறியதை மறுக்கின்றான். ''அல்லாஹ்வின் கை கட்டப்பட்டுள்ளது'' என்று யூதர்கள் கூறுகின்றனர். அவர்களின் கைகளே கட்டப்பட்டுள்ளன. அவர்களது இக்கூற்றின் காரணமாக அவர்கள் சபிக்கப்பட்டனர். மாறாக அவனது இரு கைகளும் விரிக்கப்பட்டே உள்ளன''. (மாஇதா 64).*

*அல்லாஹ்வுடைய பெயர்கள், பண்புகளில் வஹீயில் வந்தவற்றை திரிபுபடுத்தாமல் அவ்வாறே நடாத்த வேண்டும். அதன் யதார்த்தத்தை தரிபடுத்துவோம். சில அடையாளங்களை அறிகிறோம். அதற்கு*

மேல் நாம் அதிகரிக்கக் கூடாது. அல்லாஹ்வைப் போன்று யாரும், எதுவுமில்லை. அவன் கூறு கின்றான்: "அவனைப் போல் எதுவும் இல்லை. அவன் செவியுறுபவன்; பார்ப்பவன்". (ஷூரா 11) .

அல்லாஹ்வின் பண்புகளை வேறு பொருளுடன் நாம் அளவிடக் கூடாது. ஏனெனில் அளவீடு செய்ய அங்கு அடிப்படையும் அதனை ஒத்த கிளையும் அவசியம். அல்லாஹ்வோ தனித்தவன். அளவீடு செய்ய அவனையொத்த ஏதும் கிடையாது. அவனுக்கு சமீபமாகும் எந்தக் கிளையும் கிடையாது. அவனை மிகைக்கும் எந்த அடிப்படையும் கிடையாது. அவன் தனித்தவன், தேவையற்றவன். அவன் யாரையும் பெறவுமில்லை, அவனை யாரும் பெற்றெடுக்கவுமில்லை. அவனுக்கு நிகராக யாருமில்லை.

காதால் கேட்பவற்றை கண்ணால் காண்பவற்றுடன் வைத்து அளவீடு செய்யக் கூடியதாகவே அல்லாஹ் மனித புத்திகளைப் படைத்துள்ளான். அவன் தன்னைப் பற்றி அறிவிக்கும் செய்தியை, அவனை இதற்கு முன் காணாத நிலையில் அந்தப் புத்திகள் செவிமடுக்கின்றன. எனவே அச்செய்தியைத்தான் பார்த்த மிக நெருக்கமான ஒரு பொருளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றன. இதற்குப்பின், தான் கண்ட பொருளைப் போன்றே ஒவ்வொருவரும் கற்பனை செய்து, அதனடிப்படையிலேயே விதமும் கற்பிப்பார்கள். ஆனால் அல்லாஹ்வுக்கு நிகராக யாருடைய புத்தியிலும் எதுவும் கற்பனையாக உருவாக முடியாது. நாம் மறுக்க நினைக்கும் ஒரு தீய உதாரணம் எமது உள்ளத்தில் உருவாகியதை வைத்து அல்லாஹ்வின் பெயரையோ, பண்பையோ அதன் யதார்த்தத்தை விட்டும் செயலிழக்கச் செய்யலாகாது. அவ்வாறு செய்தால் நாம் ஒரு தவறான அளவீட்டு முறையில் விழுந்து விடுவோம். உண்மையான பலமான ஒரு செய்தியைப் பொய்ப்பித்தவர்களாகி விடுவோம். மாறாக அல்லாஹ் தனக்கிருப்பதாகக் கூறிய பெயர், பண்புகளை அவ்வாறே ஏற்றுக் கொண்டுவிட்டு, அவை பற்றி எமது உள்ளத்தில் உருவாகும் தவறான கருத்தையே மறுக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: "அவர்களுக்கு முன்னே உள்ளதையும், அவர்களுக்குப் பின்னே உள்ளதையும் அவன் அறிகிறான். அவனை அவர்கள் முழுமையாக அறிந்து கொள்ள மாட்டார்கள்". (தாஹா

*110), மேலும் கூறுகின்றான்: "அவனைப் பார்வைகள் முழுமையாக அடையாது, அவனோ பார்வைகளை முழுமையாக அடைகிறான். அவன் நுட்பமானவன்; நன்கறிந்தவன்". (அன்ஆம் 106).*

*அல்லாஹ் வானிலே அர்ஷுக்கு மேலுள்ளான். அவன் கூறுகின்றான்: "அவனே முதலானவன்; முடிவானவன்; வெளிப்படையானவன்; அந்தரங்கமானவன். ஒவ்வொரு பொருளையும் அவன் அறிந்தவன். வானங்களையும், பூமியையும் அவனே ஆறு நாட்களில் படைத்தான். பின்னர் அர்ஷின் மீது தரிபட்டான். பூமியில் நுழைவதையும், அதிலிருந்து வெளிப்படுவதையும், வானிலிருந்து இறங்குவதையும், அதில் ஏறுவதையும் அவன் அறிவான். நீங்கள் எங்கே இருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கிறான். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்ப்பவன். (ஹதீத் 3,4) .*

*அவன் (அர்ஷுக்கு) மேலிருந்து கொண்டு, அனைத்து விடயங்களையும் அறிந்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ளான். அவன் தனது அடியார்களுடன் இருப்பதாகவும் கூறியுள்ளான். எனவே அவன் தனது அறிவு, கேள்வி, பார்வையின் மூலம் அவர்களுடன் இருக்கின்றான். நீங்கள் எங்கே இருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கிறான். (ஹதீத் 4) . மேலும் உதவி செய்து வலுப்படுத்துவதன் மூலம் தனது நேசர்களுடன் உள்ளான். "அஞ்சாதீர்கள்! நான் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் உங்களுடன் இருக்கிறேன்" என்று அவன் கூறினான். (தாஹா 46).*

*அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய பரிபூரண மான நாட்டம் அல்லாஹ்வுக்கே உரியது. அவன் நாடியது நிகழும். நாடாதது நிகழாது. தனக்கு நாட்டம் இருப்பதாக அவன் கூறியதை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நடைமுறைச் சாத்தியமற்றதைச் செய்தும், முரணானவற்றை இணைத்தும் பகுத்தறிவுவாதிகள் அதில் மூழ்கிச் செல்வது போல் நாமும் மூழ்கக் கூடாது. அல்லாஹ் கூறுகின்றான்: "தான் நாடியதை அல்லாஹ் இப்படித்தான் செய்வான்" (ஆல இம்ரான் 40), மேலும் கூறுகின்றான்: "எனினும் அல்லாஹ், தான் விரும்புவதைச் செய்வான்". (பகரா 253), மேலும் கூறுகின்றான்: "அர்ஷுக் குரியவன்; மகத்துவமிக்கவன்.*

நினைத்ததைச் செய்து முடிப்பவன்". (புரூஜ் 15,16). வஹீ மூலம் உறுதியான பெயர், பண்புகளை ஏற்கவேண்டும். ஏனையவற்றில் மௌனிக்க வேண்டும். வஹீயில் இடம்பெறாவிட்டாலும் கவலை, அழுகை, பசி போன்று அல்லாஹ்வுக்குப் பொருந்த மாட்டாது எனப் பகுத்தறிவு சொல்லுகின்ற குறைகளை விட்டும் அல்லாஹ்வைத் தூய்மைப்ப படுத்த வேண்டும்.

# ஏழாம் அத்தியாயம்

*அல்குர்ஆன் என்பது அல்லாஹ் பேசிய வார்த்தை யாகும். அதனுடைய எழுத்துக்கள், வசனங்கள், அத்தியாயங்கள், அனைத்தும் உட்பட அவன் யதார்த்தமாகப் பேசினான். அது அல்லாஹ் நாடிய கருத்துக்களின் வார்த்தை வடிவமென்றோ, அல்லாஹ்வின் கருத்துக்கு வேறொருவர் (ஜிப்ரீல் (அலை) அல்லது நபியவர்கள்) வசனமமைத்தார் என்றோ கூறமாட் டோம். மாறாக அவன் நாடிய போதெல்லாம் நாடிய விதத்தில் பேசுவான் என்றே கூற வேண்டும். இறைவன் கூறுகின்றான்: "அல்லாஹ் மூஸாவுடன் உண்மையாகவே பேசினான்". (நிஸா 164), மேலும் கூறுகின்றான்: "நாம் வாக்களித்த இடத்துக்கு மூஸா வந்து, அவரிடம் அவரது இறைவன் பேசியபோது". (அஃராப் 143).*

**والله يقول الحق** *"அல்லாஹ் உண்மையே கூறுகிறான்". (அஹ்ஸாப் 4) என்பது அவன் பேசிய வார்த்தையாகும்.*

*அல்லாஹ்வுடைய பேச்சை உள்ளங்கள் மனனமிடு கின்றன. "மாறாக, இவை தெளிவான வசனங்கள். கல்வி வழங்கப்பட்டோரின் உள்ளங்களில் இருக்கின்றன". (அன்கபூத் 49).*

*அது செவிகளால் கேட்கப்படக் கூடியது. "இணை கற்பிப் போரில் யாரும் உம்மிடம் அடைக்கலம் தேடினால் அல்லாஹ் வின் வார்த்தைகளைச் செவியுறுவதற்காக அவருக்கு அடைக் கலம் அளிப்பீராக!" (தௌபா 6). அதனை எத்திவைப்பது நபியவர் களாயிருந்தாலும் அது அல்லாஹ்வுடைய வார்த்தை என்பதை விட்டும் வெளிப்படவில்லை.*

*அது வரிகளில் எழுதப்படக்கூடியது. "விரித்து வைக்கப் பட்ட ஏட்டில் எழுதப்பட்ட புத்தகத்தின் மீது சத்தியமாக" (தூர் 2,3). அவனிடத்திலுள்ள "லௌஹுல் மஹ்பூள்" எனும் ஏட்டில் அதனை பாதுகாத்து வைத்துள்ளான். இறைவன் கூறுகின்றான்: "ஆம்! இது*

*மகத்தான குர்ஆன்!, பாதுகாக்கப்பட்ட ஏட்டில் உள்ளது.'' (புரூஜ் 21,22). மேலும் கூறுகின்றான்: ''இது நம்மிடம் உள்ள தாய் ஏட்டில் உள்ளது. இது உயர்ந்ததும், ஞானம் நிறைந்ததுமாகும்''. (ஸுக்ருப் 4).*

*வரிகளில் எழுப்பட்டதென்பதனால் அது அல்லாஹ்வின் வார்த்தை என்பதை விட்டும் வெளிப்படமாட்டாது. எழுதப்பட்ட காகிதம், மை எல்லாம் படைக்கப்பட்டவை. ஆனால் வார்த்தை கள் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை. படைக்கப் படாதவை. இறைவன் கூறுகின்றான்: ''(முஹம்மதே!) காகிதத்தில் எழுதப் பட்ட வேதத்தை உமக்கு நாம் அருளியிருந்து''. (அன்ஆம் 7). வேதத்தையும் காகிதத்தையும் வெவ்வேறாகக் காட்டியுள்ளான்.*

*படைக்கப்பட்ட பேனாக்கள், படைக்கப்பட்ட மைகளை வைத்து அல்குர்ஆனை எழுதினாலும் அது அல்லாஹ்வுடைய வார்த்தைதான் என்பதை உறுதிப்படுத்திக் கூறுகின்றான். ''பூமியில் உள்ள மரங்கள் யாவும் எழுது கோல்களாக இருந்து, கடலுடன் மேலும் ஏழு கடல்கள் (மையாக) துணை சேர்ந்தாலும் அல்லாஹ்வின் வார்த்தைகள் எழுதி முடியாது''. (லுக்மான் 27), மேலும் கூறுகின்றான்: ''எனது இறைவனின் வார்த்தை களுக்காக கடல், மையாக ஆனாலும் எனது இறைவனின் வார்த்தைகள் (எழுதி) முடிவதற்கு முன் கடல் முடிந்து விடும். உதவிக்கு அது போன்றதை நாம் கொண்டு வந்தாலும் சரியே'' என்று கூறுவீராக! (கஹ்ப்ஃ 109). அவற்றில் பேனாக்கள் எழுதியதும், எழுதாததும் அனைத்தும் அல்லாஹ்வுடைய வார்த்தைகளே.*

*அல்லாஹ்வுடைய வார்த்தை (குர்ஆன்) படைக்கப் பட்டதென யாராவது கூறினால் அவர் காபிராகி விடுவார். ஏனெனில் அவனது பேச்சு அவனது பண்புகளிலொன்று. அல்லாஹ் அவனுடைய படைப்பினங்களுக்கும் அவனது பேச்சுக்குமிடையில் வேறுபிரித்துக் காட்டியுள்ளான். ''உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வே வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்னர் அர்ஷின் மீது உயர்ந்து விட்டான். இரவைப் பகலால் அவன் மூடுகிறான். பகல், இரவை வேகமாகத் தொடர்கிறது. சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் தனது கட்டளையால் கட்டுப்படுத்தினான். கவனத்தில் கொள்க! படைத்தலும், கட்டளையும் அவனுக்கே உரியன. அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ் பாக்கியம் பொருந்தியவன்''. (அஃராப் 54).*

*அவனுடைய படைப்பினங்களாகிய வானங்கள், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றுக்கும், படைப் பினங்களை உருவாக்க பயன்படுத்தும் (ஆகிவிடு என்ற) வார்த் தைக்குமிடையில் வேறு பிரித்துக் காட்டியுள்ளான்.*

*இரு உதடுகள், நாவு, தொண்டை, காற்று, உமிழ்நீர், அவ்வுறுப்புக்களின் துடிப்பு போன்றவற்றை அல்லாஹ் படைப் பதன் மூலம் (குர்ஆனை) ஓதக் கூடியவர்களின் ஓசைகளைப் படைத்தான். இதனால் கேட்கப்படும் அவ்வார்த்தை (படைக்கப் பட்ட ஓசையிலிருந்து வெளிப்பட்டாலும்) அல்லாஹ்வுடைய வார்த்தையில்லை என்றாகிவிடாது. அல்லாஹ் கூறுகின்றான்: "அவர்கள் (இஸ்ரவேலர்கள்) உங்களை நம்புவார்கள் என்று ஆசைப்படுகின்றீர்களா? அவர்களில் ஒரு பகுதியினர் அல்லாஹ்வின் வார்த்தைகளைச் செவியேற்று விளங்கிய பின் அறிந்து கொண்டே அதை மாற்றி விட்டனர்". (பகரா 75). ஓதக்கூடியவர் அதனை மொழிந்தாலும் கேட்கப்படும் வார்த்தை அல்லாஹ்வுக்குரியது. இதனை சில அறிஞர்கள் பின்வருமாறு கூறுகின்றனர்:* **الصوت صوت القاري، والكلام كلام الباري** *«ஓசை ஓதுபவரினது, வார்த்தை படைத்தவனுடையது".*

# எட்டாம் அத்தியாயம்

## வஹீயும் புத்தியும் சேர்ந்துதான் மார்க்கத்தின் உண்மைநிலையை அறிய முடியும்.

*புத்தியில்லாதவருக்கு வஹீ மாத்திரம் பயனளிக்காது. வஹீயின்றி புத்தி மாத்திரம் (மார்க்கத்தை அறிவதில்) பயனளிக்காது. ஒன்றில் குறை ஏற்படும் போதே சத்தியத்தை விளங்குவதில் குறை ஏற்படும். வெளிப்படையில் அவ்விரண்டும் முரண்படுவது போல் தோன் றினால் எமது புத்தியை விட வஹீயை முற்படுத்த வேண்டும். ஏனெனில் வஹீ, பரிபூரண பண்புகளுடைய படைத்தவன் அல்லாஹ்வின் அறிவு. புத்தியோ பல குறைகளுடன் படைக்கப் பட்ட மனிதனின் அறிவு.*

*புத்தியானது பார்வையைப் போன்றது. வஹீ ஒளியைப் போன்றது. காரிருளில் பார்வையுள்ளவன் தனது கண்ணால் எதையும் பார்க்க முடியாது. அதேபோன்று வஹீயில்லாமல் புத்தியுள்ளவன் தனது புத்தியால் பயனடைய முடியாது. ஒளியின் அளவிற்குத்தான் கண்ணின் பார்வை தெரியும். வஹீயின் அளவிற்குத்தான் புத்திக்கும் நேர்வழி கிடைக்கும். நண்பகல் வேளையில் காட்சிகள் பூரணமாகத் தெரிவது போல் புத்தியும் வஹீயும் பூரணமடைவதன் மூலம்தான் நேர்வழியும் அறிவும் பூரணமடையும். "இறந்தவனை உயிர்ப்பித்து, மக்களிடையே நடந்து செல்வதற்காக அவனுக்கு ஒளியையும் ஏற்படுத்தினோமே அவன், இருள்களில் கிடந்து அதிலிருந்து வெளியேற முடியாமல் உள்ளவனைப் போல் ஆவானா?" (அன்ஆம் 122).*

*புத்தியுள்ளவன் தனது புத்தியால் உலகில் பயனடை கின்றான். அதேபோன்றுதான் பறவை, மிருகங்களும் தமக்கு வழங்கப்பட்ட அறிவின் மூலம் இவ்வுலகில் பயனடைகின்றன. காலத்துக்குக் காலம் அவை பிரயாணம் மேற்கொண்டு பொருத்தமான இடங்களில் இறங்கி வசிக்கின்றன. தமக்கிடையே அறிமுகமாகிக்*

*கொள்கின்றன. தாம் வசிக்கப் பொருத்தமான இடத்தைத் தேடி அறிந்து கொள்கின்றன. தமது கூடுகளைத் தாமே பிண்ணிக் கொள்கின்றன. தமது எதிரி யார் என்பதையும் இணங்கண்டு கொள்கின்றன.*

*எனினும் – விரிவாக நோக்கினால் – மனிதன் தனது புத்தியுடன் சேர்த்து நபியவர்களுக்கு அருளப்பட்ட வஹீயைக் கொண்டுதான் தனது ரப்பிடம் செல்லும் வழியை அடைய முடியும். இல்லாவிடின் அவன் இருளிலேயே இருக்கின்றான். "நம்பிக்கை கொண்டோருக்கு அல்லாஹ்வே பொறுப்பாளன். அவன் இருள்களிலிருந்து ஒளியின்பால் அவர்களை வெளியேற்றுகிறான். (ஏகஇறைவனை) மறுப்போருக்கு (அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படும்) தாகூத்களே பொறுப்பாளர்கள். அவர்கள் ஒளியிலிருந்து இருள்கள் பால் அவர்களை வெளி யேற்றுகின்றன". (பகரா 257) .*

*இங்கு அல்லாஹ் "அவர்களை அவன் வெளியேற்றுகிறான்" என்றுதான் கூறுகின்றான். ஏனெனில் அவனின்றி அவர்கள் இருளிலேயே நுழைகின்றனர். அவன்தான் நேர்வழியெனும் ஒளியின் பால் வெளியேற்றுகிறான். எவ்வாறு நெருப்பு, ஒளி இரண்டினதும் வகைகள் வெவ்வேறாயினும் பிரகாசம் எனும் போது ஒன்றாகின்றதோ அதே போன்றுதான் அல்குர்ஆனும் ஸுன்னாவும் வெவ்வேறாக இருந்தாலும் வஹீ எனும் பெயரில் ஒன்றுபடுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்: "விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள், இறைத்தூதருக்கும் கட்டுப்படுங்கள்" (நிஸாஃ 59).*

*வஹீயின்றி தனது புத்தியால் மாத்திரம் நேர்வழி பெற முடியும் என்பவன் பிரகாசமில்லாமல் தனது கண்ணால் பார்க்க முடியுமென்று சொல்பவனைப் போன்றுதான். இருவருமே அனை வராலும் ஏற்கப்பட்ட உறுதியான விடயத்தை மறுத்தவர்கள். முதலாமவர் மார்க்கமின்றி இருப்பவர். இரண்டாமவர் உலக மின்றி இருப்பவர்.*

*அல்லாஹ் தனது வஹீயை அனைத்துப் படைப்பினங் களும் நேர்வழி பெறும் ஒளியாகக் கூறியுள்ளான். "இவரை நம்பி, இவரைக் கண்ணியப்படுத்தி, இவருக்கு உதவியும் செய்து, இவருடன் அருளப்பட்ட ஒளியையும் பின்பற்றுவோரே வெற்றி பெற்றோர்".*

(அஃராப் 157). அவ்வொளிதான் (வஹீ) நபிமார்களுக்கும் அவர்களைப் பின்பற்றுகின்றவர்களுக்கும் வழி காட்டுகின்றது.

அல்லாஹ்வின் ஏவல், விலக்கல்களை ஏற்று, அவன் அறிவித்த செய்திகளை உண்மைப்படுத்த வேண்டும். அதன் காரணிகள் அறியப்படும் பட்சத்தில் அதையும் சேர்த்து நம்ப வேண்டும். இல்லாவிடில் அதனை அவனிடமே பொறுப்புச் சாட்டிவிட்டு நம்ப வேண்டும். அறியமுடியுமான சாதாரண விடயங்களையே அனைவராலும் அடைய முடியாதிருக்கும் போது, புத்தியால் அடையவே முடியாத விடயங்களில் எவ்வாறு? அதுவும் அனைத்துப் புத்திகளும் அதில் ஒன்றுபட வேண்டுமென எதிர்பார்த்தால்?

பகுத்தறிவுக்குப் பட்டதை மாத்திரம்தாம்தான் அல்லாஹ் வின் சட்டத்தில் ஏற்பேன் என்பவர் வஹீயைக் விடப் புத்தியை முற்படுத்தியவர் ஆகின்றார். ஒரு விடயம் புத்திக்குப்படா விட்டால் அது இல்லையென்றாகி விடாது. அவனது புத்திக்கு எட்டவில்லை என்றே அர்த்தம். முழுப் பிரபஞ்சத்தையும் பார்க்க முடியாதளவு எமது பார்வை மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. அனைத்தையும் கேட்க முடியாதளவு எமது செவித்திறன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று தான் புத்திக்கும் அனைத்தையும் அறிய முடியாதளவு ஓர் எல்லை உண்டு. ஏன் எறும்புக்குக்கூட நாம் கேட்க முடியாதளவு ஓர் ஓசையுண்டு. நம்மால் பார்க்க முடியாத விண்வெளி, உடுக்கள், நட்சத்திரங்கள் பல உள்ளன. (எங்களால் பார்க்க முடியாதென்பதால் அவை இல்லை என்ற அர்த்தம் கிடையாது.)

# ஒன்பதாம் அத்தியாயம்

இம்மார்க்கம் அல்லாஹ்வுக்கு மாத்திரம் சொந்தமானது. தனது அறிவையும் ஞானத்தையும் வைத்து தான் நினைத்ததை அனுமதித்து, நினைத்ததைத் தடுப்பான். மார்க்க, உலக நலவுகளுக்காகவே அவனது சட்டதிட்டங்கள் வந்தன. அவனது ஏவலும், விலக்கலும் அனைத்து அடியார்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொதுவானது. அவனது அனுமதி இன்றி யாரும் தன்னை அதிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாது.

அவனது சட்டதிட்டங்களை அமுல்படுத்துவதில் வணக் கத்தையும் உலக விடயத்தையும் வேறு பிரித்துப் பார்க்க மாட் டோம். அனைத்துமே உலக, வணக்க கட்டளைகள்தாம்.

- வணக்கம் சம்பந்தட்ட விடயங்கள்: தொழுகை, நோன்பு, ஹஜ், திக்ருகள், பள்ளிவாயில்களை நிர்வகித்தல் போன்றவை.
- உலக விடயங்கள்: வியாபாரம், விவாகம், விவாகரத்து, சொத்துரிமை போன்றவை.

(அனைத்திலும் அவனுடைய சட்ட திட்டங்கள் உள்ளன. அவற்றை அமுல்படுத்துவதில் தராதரம் பார்க்கக் கூடாது).

வணக்கத்தில் அல்லாஹ்வுடைய சட்டத்தையும், உலக விடயங்களில் பிறரின் சட்டத்தையும் எடுப்பவர் காபிராகி விடு கின்றார். ஏனெனில் முழு மார்க்கத்துக்கும் சொந்தக்காரன் அவன் மாத்திரமே. ஸுஜூதை இன்னொருவருக்கு செலுத்தும் உரிமை யாக ஆக்கியவனைப் போன்றுதான் இவ்வாறு உலக விடயங் களில் பிறரின் சட்டத்தை எடுப்பவனின் நிலை. “அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர எவருக்கும் இல்லை. அவனைத் தவிர எதையும் நீங்கள் வணங்கக் கூடாது என்று அவன் கட்டளை இட்டுள்ளான்”. (யூஸுப்ஃ 40).

யூத, கிறிஸ்தவர்கள் நிராகரிப்பாளர்களாக ஆனதும் இதன் காரணமாகத்தான். “அவர்கள் அல்லாஹ்வையன்றி தமது மதபோதகர்களையும், பாதிரிகளையும், மர்யமின் மகன் மஸீஹை யும் கடவுள்களாக்கினர். ஒரே கடவுளை வணங்குமாறுதான் அவர்கள் கட்டளையிடப்பட்டனர். அவனைத் தவிர வணக்கத்திற் குரியவன் யாருமில்லை. அவர்கள் இணை கற்பிப்பவற்றை விட்டும் அவன் தூயவன்”. (தௌபா 31). அவர்களுடைய மத போதகர்களையும், பாதிரிகளையும் சட்டநிறுவுனர்களாக ஆக்கும் இச்செயலை இணைவைப்பென்பதாகக் கூறியுள்ளான்.

அல்லாஹ் தனது வேதத்தை இறக்கி, சட்டதிட்டங்களை நிறுவினான். இச்சட்டதிட்டங்கள் இறங்கிய கால, நிலைகளை அவன் அறிந்து வைத்துள்ளதைப் போன்றே எதிர்கால, இறந்த கால நிலைகளையும் சரிசமமாக அறிந்து வைத்துள்ளான். ஒரு சம்பவம் ஏற்கனவே நடந்து விட்டது என்பதினாலோ, இனிமேல் நடக்கவிருக்கின்றது என்பதினாலோ அது பற்றிய அறிவு அவனிடத்தில் குறைவதுமில்லை. சமகாலத்தில் அது நடந்து விட்டதால் அதன் அறிவு அவனிடம் அதிகரிப்பதுமில்லை. எக்காலத்திலும் அவனது அறிவு சமமாகத் தான் உள்ளது. அவன் தூய்மையானவன். பரிபூரணமானவன்.

அல்லாஹ்வுடைய சட்டம், அது இறங்கிய காலத்திற்கு மாத்திரம்தான் பொருந்தும். ஏனைய காலத்தில் – அல்லாஹ்வின் சட்டத்திற்கு முரண்பட்டாலும் – மக்கள் தமக்குத் தேவையான முறையில் சாதகமாக சட்டங்களை நிறுவிக் கொள்ளலாம் என்று நினைப்பவன் காபிராகி விடுவான். ஏனெனில் இவன் மனித அறிவையும் அல்லாஹ்வின் அறிவையும் ஒன்றாகப் பார்க் கின்றான். இது இறைநிராகரிப்பும், இணை வைப்புமாகும். வெளிப் படையானவற்றுக்கும் மறைவானவற்றுக்கும் இடையில் மனித அறிவு வேறுபடும். அதனடிப்படையில் அவன் எடுக்கும் தீர்மா னங்களும் வேறுபடும். அதேபோன்று அல்லாஹ்வையும் நினைக் கிறான். வஹீ இறங்கும் போது அல்லாஹ்விடமிருந்த அறிவை விட தற்போது இவனிடமுள்ள அறிவை முற்படுத்துகின்றான். அதன் அர்த்தம் அல்லாஹ்வுக்கு அக்கால அறிவு மாத்திரம் தானுள்ளது.

வஹீ இறங்கும் போது இறந்தகால, எதிர்கால நிலைகள் பற்றி தெரியாது. அதனடிப்படையில்தான் அவன் சட்டம் நிறுவியுள்ளான் என்று கூறுவது போன்றுள்ளது. அல்லாஹ்வுடைய அறிவோ மறைவான, வெளிப்படையான அனைத்து விடயங்களிலும் ஒரே அளவுதான். "அவன் மறைவா னதையும், வெளிப்படையானதையும் அறிபவன். அவர்கள் இணை கற்பிப்பதை விட்டும் அவன் உயர்ந்தவன்". (முஃமினூன் 92). இரு நிலைகளிலும் அவனது தீர்ப்பு ஒன்றுதான். அல்லாஹ் கூறுகின்றான்: "அல்லாஹ்வே! வானங்களையும், பூமியையும் படைத்தவனே! மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிந்தவனே! உனது அடியார்கள் முரண்பட்ட விடயத்தில் நீயே அவர்களிடையே தீர்ப்பு வழங்குவாய்'' என்று கூறுவீராக!. (ஸுமர் 46). தனது மறைவான, வெளிப்படையான அனைத்து அடியார் களுக்கு மத்தியிலும் அவன் தீர்ப்பு வழங்குகின்றான்.

லிபரல் கொள்கைக்காரர்களைப் போன்று மார்க்க, உலக விடயங்களைப் பிரித்து, சட்டமியற்றுவதில், முதலாவதில் அல்லாஹ்வையும், மற்றதில் மனிதர்களையும் ஆக்குபவன் அங்கே பல சட்ட நிறுவுனர்களை உருவாக்கி விட்டான். சட்டமி யற்றும் அதிகாரமோ அல்லாஹ் ஒருவனுக்கு மாத்திரம்தான். "வேதத்தில் ஒரு பகுதியை ஏற்று, மறு பகுதியை மறுக்கிறீர்களா?" (பகரா 85) . எனவே அவனது சட்டங்களில் சிலதை மறுப்பவன் முழுதையும் மறுப்பவனாகின்றான்.

நபி (ஸல்) அவர்களுக்கருளிய அல்குர்ஆன், ஸுன்னா வை வைத்துத் தீர்ப்பளிக்கும்படி அல்லாஹ் ஏவியுள்ளான். "அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் அவர்களிடையே தீர்ப்பளிப்பீராக! அவர்களின் மனோ இச்சைகளைப் பின்பற்றாதீர்! அல்லாஹ் உமக்கு அருளியதில் சிலவற்றை விட்டும் அவர்கள் உம்மைக் குழப்புவார்கள் என்பதில் கவனமாக இருப்பீராக!". (மாஇதா 49). மக்களுக்கிடையில் ஏற்படும் தகராறு, பிரச்சினைகளில் தீர்ப்பு வழங்குவதே இங்கு நாடப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள குழப்பம் என்பது அல்லாஹ்வின் தீர்ப்பை விட்டும் வெளிப்படுவதே.

அல்லாஹ்வின் சட்டத்திற்கு முரணாகாத வகையில் நவீனகால பிரச்சினைகளுக்கு தகுதியானவர்கள் ஆய்வு செய்து முடிவெடுக்கலாம்.

அல்லாஹ்வின் தீர்ப்புக்கு முரண்படும் மக்கள் தீர்ப்பு, தேர்வுகளை முற்படுத்தலாகாது. மக்கள்தீர்ப்பு தான் முற்படுத்தப் பட வேண்டும் என்றிருந்தால் சகல நபிமார்களும் சத்தியத்தை விட்டும் வெளிப்பட்டிருப்பார்கள். அசத்தியத்தில் ஒன்றுபட்ட, பெரும்பான்மையினர் வழிகேட்டிலுள்ள சமூகங்களிலேயே அந்நபிமார்கள் பிறந்து வளர்ந்தனர். எனினும் மக்கள் தீர்ப்பைப் புறக்கணித்து அல்லாஹ்வின் தீர்ப்பையே எடுத்தார்கள்.

அல்லாஹ்வின் சட்டத்தை மதித்து, அதற்கு சரணடையும் முகமாவே ஸலபு அறிஞர்கள் அடிப்படைக் கொள்கை (அகீதா) சம்பந்தப்பட்ட நூல்களில் வழிகெட்ட சில இயக்கங்கள் மறுத்த கிளைச் சட்டங்களை (பிக்ஹு) உட்படுத்தியுள்ளனர். உதாரணமாக, வுழூவின் போது பாதணியை மஸ்ஹுச் செய்தல், பிரயாணத்தில் சுருக்கித்தொழல், ஆட்சியாளர் நல்லவரோ, கெட்டவரோ அவருக்குக் கீழ் நின்று ஜிஹாத் புரிதல் போன்றன.

இன்னும் சில சட்டங்கள் உள்ளன. காலத்துக்குக்காலம் புதுப்புது வழிகெட்ட சிந்தனைகள் தோன்றும் போது அவையும் புதுப்பிக்கப்பட்டு நினைவுபடுத்த வேண்டிய தேவையுள்ளன. அவ்வாறான சட்டங்கள் சில:

- பெண்மீது கடமையான ஹிஜாப் வணக்கமே தவிர வழக்கமல்ல.
- நிர்ப்பந்தமின்றி ஆண் – பெண் கலந்திருப்பது ஹராமாகும்.
- ஒரு காபிர் ஒரு முஸ்லிமுக்குப் பொறுப்பாக (வலீ) முடியாது.
- ஆணுக்குக் கிடைக்கும் அனந்தரச் சொத்தில் பாதியே பெண் ணுக்குக் கிடைக்கும்.
- ஆண் கொல்லப்பட்டால் கிடைக்கும் தண்டப்பணத்தின் பாதியேபெண்கொல்லப்பட்டால்கிடைக்கும்.(இருவருக்கும் சமமாக வழங்க தண்டப்பணம் உயிருக்கான பெறுமதியல்ல. உயிருக்கான பெறுமதியாக இருந்தால் ஒருயிருக்குப் பதில்

*ஓர் உயிர்தான் எடுக்கப்பட வேண்டும். ஆனால் சில வேளை ஒரு பெண்ணின் கொலையில் சம்பந்தப்படும் பல ஆண்கள் அவள் ஒருத்திக்காகக் கொல்லப்படுவார்கள். எனவே தண்டப் பணம் என்பது இறந்தவரின் குடும்பத்துக்கு ஆர்தல் தொகை யாக வழங்கப்படுகின்றதே தவிர அது இறந்தவரின் பெறுமதி யைப் பறைசாற்றுவதல்ல).*

- *விவாகம் செய்த பின் விபச்சாரத்தில் ஈடுபட்டவனைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்பது அல்லாஹ் நிர்ணயித்த சட்டங்களில் ஒன்று.*

*(மேற்கூறியவை காலத்துக்குக் காலம் நினைவுபடுத்தப் பட வேண்டிய மார்க்க சட்டங்களாக உள்ளன.)*

# பத்தாம் அத்தியாயம்

*அல்லாஹ் படைப்பினங்களைப் படைக்கு முன்னே அவற்றின் விதியை நிர்ணயித்து விட்டான். அனைத்துப் படைப் பினங்களும், அவை உருவாக்கப்பட முன்னரே எழுதப்பட்ட விதியின் அடிப்படையில் தான் படைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ் கூறுகிறான்: "அவனே எல்லாப் பொருட்களையும் படைத்து, அவற்றை அதனதன் அளவுப்படி அமைத்தான்". (புர்கான் 02). மேலும் கூறுகின்றான்: "நாம் ஒவ்வொரு பொருளையும் நிச்சய மாக (குறிப்பான) அளவின்படியே படைத்திருக்கின்றோம்". (கமர் 49). மேலும் கூறுகின்றான்: "இன்னும் அல்லாஹ்வின் கட்டளை தீர்மானிக்கப்பட்ட விதியாகும்". (அஹ்ஸாப் 38).*

*நன்மை, தீமை அனைத்து விடயங்களின் அளவுகளையும் அல்லாஹ் நிர்ணயித்து விட்டான். நபி (ஸல்) அவர்கள் ஈமானின் கடமைகள் பற்றிக் கூறும் போது பின்வருமாறு கூறினார்கள்: நன்மை, தீமை அனைத்தும் அல்லாஹ்வைக் கொண்டே ஆகின்றன என்ற விதியை நம்புவதுமாகும். (அறிவிப்பவர்: உமர் பின் கத்தாப் (ரலி), ஆதாரம்: முஸ்லிம் 8).*

*விதிகளை அறிந்தவனால்தான் அவற்றை நிர்ணயிக்க முடியும். அந்த வகையில் அல்லாஹ் நிர்ணயித்த விதிகளை அவன் அறிந்தே இருக்கின்றான். அதன் விளாவாரியான, நுணுக்கமான விடயங்கள், அதன் இடங்கள், இயக்கங்கள், ஆரம்பம், முடிவு அனைத்தையும் அவற்றைப் படைத்தவன் மாத்திரமே அறிகின்றான். அல்லாஹ் கூறுகின்றான்: "அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றலுடையவன் என்பதையும், ஒவ்வொரு பொருளையும் அறிவால் அல்லாஹ் சூழ்ந்து விட்டான் என்பதை யும் நீங்கள் அறிந்து கொள்வதற்காக". (தலாக் 12). மேலும் கூறுகின்றான்: "படைத்தவன் (தன் படைப்பை) அறிய மாட்டானா? அவன் நுட்பமானவன்; நன்கறிந்தவன்". (முல்க் 14)*

அவனுடைய விதியை மறுப்பவன் அவனுடைய அறிவை மறுக்கின்றான். அவனுடைய அறிவை மறுப்பவன் அவனுடைய விதியை மறுக்கின்றான்.

படைப்புக்களின் அனைத்து அளவீடுகளும் அல்லாஹ் விடத்தில் ஓர் ஏட்டில் எழுதப்பட்டுள்ளன. அல்லாஹ் கூறுகின்றான்: "அந்தப் புத்தகத்தில் எந்த ஒன்றையும் நாம் விட்டுவிட வில்லை". (அன்ஆம் 38). மேலும் கூறுகின்றான்: "ஒவ்வொரு பொருளையும் தெளிவான ஏட்டில் வரையறுத்துள்ளோம்". (யாஸீன் 12).

அல்லாஹ்வுடைய படைப்புகள் இரு வகைப்படும்:

1. தேர்வோ, சுய நாட்டமோ இல்லாத வசப்படுத்தப் பட்டவை. உதாரணமாக: உடுக்கள், கோல்கள் போன்றன.

2. தேர்வும் நாட்டமும் உள்ளவை. உதாரணமாக: மனிதர்கள், ஜின்கள், வானவர்கள் போன்றோர். அல்லாஹ் அவர் களை எந்தவொரு தேர்வுரிமையுமின்றி வழி நடாத்தவுமில்லை. அவ்வாறிருந்தால்அவர்களைப்பாவத்தின்பால்கட்டாயப்படுத்தி பின்பு அதற்காக அவர்களையே தண்டிப்பதாகிவிடும். மறுபுறம், எவ்வித வழிநடாத்தலுமின்றி சுயமாக இயங்குபவர்களாகவும் அவர்கள் இருக்கவில்லை. அவ்வாறிருந்தால் அல்லாஹ்வின் செயல், நாட்டத்தில் இவர்களும் பங்கெடுக்கின்றார்கள் என்றாகி விடும். மாறாக அல்லாஹ் தனது நாட்டத்துக் கீழ் இவர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட தேர்வுரிமை, நாட்டத்தைக் கொடுத்துள்ளான். "இது அகிலத்தாருக்கும், உங்களில் யார் நேராக நடக்க விரும்புகிறாரோ அவருக்கும் அறிவுரை தவிர வேறு இல்லை. அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ் நாடுவதைத் தவிர நீங்கள் நாடுவதில்லை". (தக்வீர் 27 - 29).

அடியார்களையும் அவர்களுடைய செயற்பாடுகளையும் அல்லாஹ்வே படைத்தான். அவன் கூறுகின்றான்: "நீங்கள் செதுக்கிக் கொண்டதை வணங்குகிறீர்களா? அல்லாஹ்வே உங்களையும், நீங்கள் செய்தவற்றையும் படைத்தான் என்றார்". (ஸாஃப்பாத் 95, 96).

அல்லாஹ் சிலதுக்குச் சிலதை காரணிகளாக உருவாக்கியுள்ளான். அதனால் ஏற்படும் தாக்கத்தையும் அவனே உருவாக்கினான்.

இது, இவ்வுலகை ஓர் ஒழுங்கு, வழியமைப்பில் நடாத்துவதில் அவனது அளப்பரிய ஞானத்தினதும், விசாலமான அறிவினதும் வெளிப்பாடே.

அல்லாஹ்வின் விதியில் அதன் காரணத்தையோ, உண்மைநிலையையோ அறிய முடியாத பட்சத்திலும் அவற்றை நாம் நம்பித்தான் ஆக வேண்டும். புத்திக்கு எட்டாத சில காரணங்களும் உண்டு. புத்தி என்பது ஒரு பாத்திரத்தைப் போன்றது. காரணங்கள் கடல் நீரைப்போன்றது. எல்லக் கடல் நீரையும் பாத்திரத்தினுள் அடைக்க முடியாதது போல் எல்லாக் காரணிகளையும் புத்தியால் அறிய முடியாது. அதையும் மீறி அதில் திணிக்கப்பட்டால் அவை புத்தியை மழுங்கடித்து, தடுமாற வைத்துவிடும். இன்னும் சில காரணங்கள் உள்ளன. அவற்றைத் தீர ஆராயும்போது இன்னும் தடுமாற்றத்தைத் தான் அதிகரிக்கும். இது பார்வையைப் போன்றுதான். நண்பகல் வேளையில் நேரடியாக சூரியனைப் பார்த்துக் கொண்டே இருக்கும்போது வலியும் தடுமாற்றமும்தான் மென்மேலும் அதிகரிக்கின்றன.

# பதினோராம் அத்தியாயம்

*மரணம் என்பது நிச்சயம் நிகழக்கூடிய ஒன்று. "இதில் உள்ள அனைவரும் அழிபவர்கள். மகத்துவமும், கண்ணியமும் மிக்க உமது இறைவனின் முகமே மிஞ்சும்". (ரஹ்மான் 26, 27). அந்த மரணத்துக்குப் பின் நிகழுமென்பதாக வஹீயில் இடம் பெற்றுள்ள அனைத்தையும் ஏற்றுக்கொள்வதும் இறைநம்பிக்கையிலுள்ளது. அவை:*

- *மண்ணறை சோதனையும் அதன் இன்ப, துன்பங்களும்.*
- *மறுமையில் எழுப்பப்படல்.*

*அல்லாஹ் கூறுகின்றான்: "ஸூர் ஊதப்படும். உடனே அவர்கள் மண்ணறைகளிலிருந்து தமது இறைவனை நோக்கி விரைவார்கள்". (யாஸீன் 51). அதில் ஐயங்கொள்பவன் காபிராகி விடுவான். "(ஏக இறைவனை) மறுப்போரிடம் "எனது வசனங்கள் உங்களுக்குக் கூறப்படவில்லையா? அகந்தை கொண்டீர்கள்! குற்றம் புரிந்த கூட்டமாக இருந்தீர்கள்'' (எனக் கூறப்படும்). "அல்லாஹ்வின் வாக்கு உண்மையானது; அந்த நேரத்தில் எந்தச் சந்தேகமும் இல்லை'' என்று கூறப்பட்டால் "யுக முடிவு நேரம் என்றால் என்ன என்று அறிய மாட்டோம். நாங்கள் ஊகம் செய்வோர் தவிர வேறு இல்லை. நாங்கள் உறுதியாக நம்புவோர் அல்லர்'' என்று கூறினீர்கள்". (ஜாஸியா 31, 32). மண்ணறை இன்ப, துன்பங்கள், மறுமையில் எழுப்பப்படல் போன்றவற்றில் ஐயங்கொள்பவனே காபிர் என்றால் மறுமையை முழுமையாக பொய்ப்பிப்பவனின் நிலை இதை விடக் கொடியது. "எனினும் அவர்கள் அந்த நேரத்தைப் பொய்யெனக் கருதுகின்றனர். அந்த நேரத்தைப் பொய்யெனக் கருதுபவருக்கு நரகத்தைத் தயாரித்துள்ளோம்". (புர்கான் 11).*

## விசாரணை:

*அல்லாஹ் கூறுகின்றான்: "கியாமத் நாளுக்காக நீதியான*

*தராசுகளை நிறுவுவோம். எவருக்கும் சிறிதளவும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. ஒரு கடுகு விதை அளவே இருந்த போதும் அதையும் கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதும்". (அன்பியாஃ 47).*

## நற்கூலி, வேதனை, சுவனம், நரகம்:

*அல்லாஹ் கூறுகின்றான்: "கெட்டவர்கள் நரகில் இருப் பார்கள். அங்கே அவர்களுக்கு பேரிரைச்சலும், பெரும் ஓலமிடு தலும் தான் இருக்கும்". (ஹூத் 106). மேலும் கூறுகின்றான்: "நல்லோர் சொர்க்கத்தில் இருப்பார்கள்". (ஹூத் 108).*

*இறைமறுப்பாளர்கள் நரகிலும், நல்லடியார்கள் சுவனத்திலும் இருப்பார்கள். அல்லாஹ் கூறுகின்றான்: "(என்னை) மறுப்போரை இவ்வுலகிலும், மறுமையிலும் கடுமை யாகத் தண்டிப்பேன். அவர்களுக்கு எந்த உதவியாளரும் இருக்க மாட்டார்.'' என்று அல்லாஹ் கூறியதை நினைவூட்டுவீராக!. நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்வோரின் கூலிகளை அவர்களுக்கு அவன் முழுமையாக வழங்குவான். அநீதி இழைத்தோரை அல்லாஹ் விரும்ப மாட்டான்". (ஆல இம்ரான் 56, 57).*

*இதனுடன் சேர்த்து வஹீ மூலம் உறுதியான ஸிராத் எனும் பாலம், அமல்கள் நிறுக்கப்படும் தராசு, ஹவ்ழ் எனும் நீர்த்தடாகம், நன்மை, தீமைகள் பதியப்பட்ட ஏடுகள் போன்ற அனைத்து மறுமை நிகழ்வுகளையும் நம்ப வேண்டும்*

# பன்னிரண்டாம் அத்தியாயம்

*கூட்டாக (ஜமாஅத்தாக) சேர்ந்திருப்பது அவசியமாகும். ஒரு தலைவரின்றி ஜமாஅத் உருவாக முடியாது. அல்லாஹ்வுக்கு வழிப்படுவதுடன் (அவனது கட்டளைப் பிரகாரம்) முஸ்லிம்களின் தலைவருக்கும் கட்டுப்படுதல் வேண்டும். "நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள்! இத்தூதருக்கும், (முஹம்மதுக்கும்) உங்களில் அதிகாரம் உடை யோருக்கும் கட்டுப்படுங்கள்!". (நிஸாஃ 59).*

*ஒரு காபிரின் தலைமைத்துவம் செல்லுபடியாகாது. அவனுக்கு உறுதிப் பிரமாணம் (பைஅத்) அளிக்கவும் முடியாது. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டாலும் அத்தலைவனின் சுயவாழ்கை இஸ்திரமாவதற்கின்றி மக்களின் உலக வாழ்வு இஸ்திரமாகும் பொருட்டுத்தான் கட்டுப்பட வேண்டும்.*

*தலைவர் அறிஞராக இருக்க வேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் உலக, மார்க்க விடயங்கள் இஸ்திரமாகும் பொருட்டு ஓர் அறிஞரைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். "பாதுகாப்பு அல்லது பயம் பற்றிய செய்தி அவர்களுக்குக் கிடைத்தால் அதைப் பரப்புகின்றனர். அதை இத்தூதரிடமும், (முஹம்மதிடமும்) தங்களில் அதிகாரமுள்ளோரிடமும் கொண்டு சென்றிருந்தால் ஆய்வு செய்வோர் அதை அறிந்து கொள்வார்கள்". (நிஸாஃ 83). அறிஞரால் தான் ஆய்வு செய்ய முடியும்.*

*ஆட்சித்தலைவருக்கு எதிராக புரட்சி செய்ய முடியாது. அப்பதவிக்காகத் தகராறில் ஈடுபடவும் கூடாது. தெட்டத் தெளிவான இறைமறுப்பை அவர் பகிரங்கமாகச் செய்யும் வரை அவரது அநியாயங்களை சகித்துக்கொள்ள வேண்டும். அவருக்கெதிராக கிளர்ந்தெழக்கூடாது. நபி (ஸல்) கூறியதாக அன்னை உம்முஸலமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: "உங்களுக்குச் சில ஆட்சித் தலைவர்கள்*

*நியமிக்கப்படுவார்கள். அவர்களிடம் நீங்கள் நன்மையையும் காண்பீர்கள்; தீமையையும் காண்பீர்கள். தீமையை (மனதால்) வெறுத்தவர் பிழைத்தார்; (மனதால்) மறுத்தவர் தப்பித்தார். (இதற்கு மாறாக,) யார் (தீமையைக்கண்டு) திருப்தி அடைந்து (அதற்குத்) துணை போனாரோ (அவருக்குக் குற்றத்தில் பங்கு உண்டு)'' என்று கூறினார்கள். மக்கள், "அல்லாஹ்வின் தூதரே! அவர்களுடன் நாங்கள் போரிட லாமா?'' என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இல்லை. அவர்கள் தொழுகையை நிறைவேற்றும் வரை (வேண்டாம்)'' என்று கூறினார்கள். (முஸ்லிம் 1854).*

*அவரது தீங்கைப் போக்கும் விதமாக அல்லது குறைக் கும்விதமாக அறிவுடனும் நிதானத்துடனும் அவருக்கு உபதேசிக் கப்பட வேண்டும். மாறாக அவரது கோபத்தைக் கிளறும் வகை யிலல்ல. நபி (ஸல்) கூறியதாக தமீமுத்தாரி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "மார்க்கம் (தீன்) என்பதே "நலம் நாடுவது'தான்'' என்று கூறினார்கள். நாங்கள், "யாருக்கு (நலம் நாடுவது)?'' என்று கேட்டோம். நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வுக்கும், அவனு டைய வேதத்துக்கும், அவனுடைய தூதருக்கும், முஸ்லிம்களின் தலைவர்களுக்கும், அவர்களில் பொதுமக்களுக்கும்'' என்று பதில ளித்தார்கள். (முஸ்லிம் 55).*

*தலைவருடைய இரகசியங்களைத் துருவித் துருவி ஆராய்வதோ, அவரது தனிப்பட்ட தவறுகளை அம்பலப்படுத்து வதோ, அவருடைய குறைகளை, பாவங்களைப் பகிரங்கப்படுத்துவதோ கூடாது. அதுபற்றி தனிப்பட்ட ரீதியில் உபதேசிக்கப்பட வேண்டும்.*

*தடுக்கப்பட்ட ஒன்றை மக்களுக்கு மார்க்கமயப்படுத்தி பகிரங்கமாக் கூறினால் அந்தத் தலைவருடைய நிலையைக் கவனத்திற்கொள்ள வேண்டும். அவரிடம் தனிமையில் எடுத்துக் கூறினால் திருந்தி, பாவமீட்சி பெற்று, தனது கருத்தை மாற்றிக் கொள்பவராக இருந்தால் அதனைத்தான் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். மக்கள் மத்தியில் விமர்சிக்கக்கூடாது. ஏற்றுக் கொள்பவராக அத்தலைவர் இல்லையென்றால் மார்க்க சட்ட திட்டங்கள் மாற்றப்படாமலிருக்கும் பொருட்டு அதனை மக்களுக்குத்தெளிவு படுத்த வேண்டும். ஏனெனில் இது மக்கள்,*

ஆட்சித் தலைவர், அவர்களுடைய மார்க்கம் அனைத்திற்கும் செய்ய வேண்டிய நலவாக இருக்கின்றது. இது அல்லாஹ்வுக்கும், அவனுடைய வேதத்துக்கும், அவனுடைய தூதருக்கும், முஸ்லிம் களின் தலைவர்களுக்கும், அவர்களில் பொதுமக்களுக்கும் நலவு நாடுவதிலுள்ளதாகும். எல்லாவற்றையும் விட இதனை முற்படுத்த வேண்டும்.

ஓர் அறிஞர் மக்களையும் அவர்களது நலவுகளையும் விட்டு ஒதுங்கலாகாது. தன்னுடன் சம்பந்தப்படும் உலக விடயங்களில் துறவரத்தைக் கடைபிடிப்பது விரும்பத்தக்கதாக இருந்தாலும் மக்கள் விடயத்தில் அவ்வாறிருப்பது விரும்பத்தக்கதல்ல. சிறு தொகையாக இருந்தாலும் அநீதியிழைக்கப்பட்டவனுக்காக உதவ வேண்டும். ஒரு பேரீத்தம் பழத்துண்டைக் கொண்டாயினும் பசித்தவனுக்கு உணவளிக்க வேண்டும். ஏனெனில் அறிஞருக்கும் ஓரளவு மக்கள் மீது அதிகாரமுண்டு. உலக விடயங்களை சீராக்கி வைப்பது மார்க்க விடயங்களைத் சீர் திருத்துவதற்கான வழியாக அமையும். நபி (ஸல்) அவர்கள் உலக சொத்துக்களுக்காக தலையை உயர்த்தியதே இல்லை. அப்படியிருந்தும் பரீரா என்ற அடிமை மற்றும் ஏனையோருக் காக ஒரு சில தீனார்களுக்காகக் கூட அவர்கள் பக்கம் நின்று பெற்றுக் கொடுப்பார்கள். அவ்விடயத்தை மக்கள் மத்தியில் ஆர்வமூட்டி பிரச்சாரம் கூட செய்வார்கள்.

# பதின் மூன்றாம் அத்தியாயம்

*மறுமை வரை அறப்போர் தொடர்ந்து கொண்டே இருக்கும். அல்குர்ஆன் நிலைத்திருக்கும் காலமெல்லாம் இப்புவியிலிருந்து அறப்போரின் சட்டம் நீக்கப்படமாட்டாது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) கூறினார்கள்: "என் சமுதாயத்தாரில் ஒரு பிரிவினர் சத்தியத்திற்கு ஆதர வாகப் போராடிக் கொண்டே இருப்பார்கள். மறுமை நாள்வரை அவர்கள் (சத்தியத்தில்) மேலோங்கியே நிற்பார்கள். (முஸ்லிம் 156).*

*தற்காப்பு யுத்தத்திற்கு தலைவரின் அனுமதி தேவையில்லை. மேலும் தனக்கு வரும் நோவினையைத் தடுக்கும் எண்ணத்தைத் தவிர வேறு எண்ணங்களும் தேவையில்லை. இது போன்ற தற்காப்புப் போர் தனது உயிர், உடமை, மானம் எதற்காகவென்றாலும் அவசியமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸஈத் பின் ஸைத் (ரலி) கூறினார்கள்: "தனது உடமைக்காகக் கொல்லப்படுபவர் ஷஹீதாவார். தனது குடும்பத் திற்காகவோ, தனது உயிருக்காகவோ, தனது மார்க்கத்திற்காகவோ கொல்லப்படுபவரும் ஷஹீதாவார்". (அபூ தாவூத் 4772, திர்மிதீ 1421, நஸாஈ 4059, இப்னு மாஜாஃ 2580). இதே செய்தி புஹாரி (2348), முஸ்லிம் (14)ல் சுருக்கமாக இடம்பெற்றுள்ளது.*

*முஸ்லிமோ, காபிரோ எமது மானம், உயிர், உடமை ஆகியவற்றில் அத்துமீறும் போது அதனைத்தடுப்பது அவசியமாகும். காபூஸ் (ரஹ்) தனது தந்தை முகாரிக் (ரலி) அவர்களைத் தொட்டும் கூறுகின்றார்கள்: "ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "ஒருவன் எனது உடமையை அபகரிக்க என்னிடம் வந்தால்?" என வினவினார். அதற்கு நபியவர்கள் "நீ அவனுக்கு அல்லாஹ்வை நினைவுபடுத்து" என்றார்கள். அதற்கு அம்மனிதர் "அவன் (அல்லாஹ்வை) நினைத்துத்*

*தவிர்ந்து கொள்ளாவிட்டால்?" என்றார். "சூழவுள்ள முஸ்லிம்களின் உதவியை நாடு" என்றார்கள். என்னைச் சூழ முஸ்லிம்கள் யாருமில்லையென்றால்? என வினவ, "அதிகாரியின் உதவியை நாடு" என்றார்கள். "அதிகாரி என்னைவிடத் தொலைவில் இருந்தால்?" என வினவினார். "மறுமையில் நீ உயிர்த் தியாகிகளில் ஒருவராக மாறும் வரை, அல்லது உனது உடமைகளைப் பாதுகாக்கும் வரை நீ போராடு" என்றார்கள்". (நஸாஈ 4081, அஹ்மத் 22514, இப்னு அபீ ஷைபா 28043, தபரானீ 20/313).*

நாமாகத் தொடுக்கும் போரில் அல்லாஹ்வின் இம்மார்க் கத்தை உயர்த்த வேண்டும் என்ற நன்நோக்கம் அவசியம் இருக்க வேண்டும். *அபூ மூஸா அஷ்அரீ (ரலி) கூறுகின்றார்: "கிராமவாசி ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம், ஒரு மனிதர் போரில் கிடைக்கும் பொருட்களுக்காகப் போரிடுகின்றார். மற்றொரு மனிதர் தான் (புகழ்ந்து) பேசப்பட வேண்டும் என்பதற் காகப் போர் புரிகின்றார். (இன்னொருவர்) தனது (வீரமிக்க) அந்தஸ்தைப்பிறர் பார்க்க வேண்டும் என்பதற்காகப் போர் புரிகின்றார். (இவர்களில்) யார் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிபவர் ஆவார்? என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள், எவர் அல்லாஹ்வின் மார்க்கம் மேலோங்கியதாய் இருக்கவேண்டும் என்பதற்காகப் போரிடுகின்றாரோ அவர்தான் அல்லாஹ்வின் பாதையில் போரிடுபவர் ஆவார் என்று பதிலளித்தார்கள்". (புஹாரி 3126, முஸ்லிம் 1904).*

அப்போரில் பாவமல்லாத காரியங்களில் தலைவர் சொல்வதற்கு செவிமடுத்து, வழிப்படல் வேண்டும். *நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) கூறினார்கள்: "எனக்குக் கீழ்ப்படிந்தவர் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்தவர். எனக்கு மாறு செய்தவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்தவர். என்னால் நியமிக்கப்பட்ட தலைவருக்குக் கீழ்ப் படிந்தவர் எனக்குக் கீழ்ப்படிந்தவர். என்னால் நியமிக்கப்பட்ட தலைவருக்கு மாறு செய்தவர் எனக்கு மாறு செய்தவர் ". (புஹாரி 7137, முஸ்லிம் 1835).*

# பதின் நான்காம் அத்தியாயம்

நபிமார்களுக்கடுத்து சிறந்த சமூகம் முஹம்மத் (ஸல்) அவர்களின் அருமைத் தோழர்கள்தாம். அவர்களின் சிறப்புப் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.: “முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார். அவருடன் இருப்போர் (ஏக இறைவனை) மறுப்போர் மீது கடுமையாகவும், தமக்கிடையே இரக்கம் மிகுந்தும் இருக்கின்றனர். ருகூஃ, ஸஜ்தா செய்தோராக அவர்களைக் காண்பீர்! அல்லாஹ்விடமிருந்து அருளையும், பொருத்தத்தையும் தேடுவார்கள்.” (பத்ஹ் 29).

நபிமார்களுக்கு மத்தியில் தராதரங்கள் இருப்பது போல் ஸஹாபாக்களுக்கு மத்தியிலும் தராதரங்கள் உள்ளன. நபிமார்களில் மிகக்குறைந்த பட்சதரத்தில் உள்ளவர் ஸஹாபாக்களில் அதியுயர் தரத்திலுள்ளவரை விடச் சிறந்தவர். ஸஹாபாக்களில் மிகக் குறைந்தபட்ச தரத்தில் உள்ளவர் தாபிஈன்களில் அதியுயர் தரத்திலுள்ளவரை விடச் சிறந்தவர்.

பொதுவாக முதலில் இஸ்லாத்தில் நுழைந்து முந்திக் கொண்டவர்களே ஸஹாபாக்களில் சிறந்தவர்கள். பலமில்லாக் காலத்தில் விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்கள் பலமான காலத்தில் நபியவர்களை விசுவாசித்தவர்களை விட நெருக்கமானவர்கள். மக்கா வெற்றிக்கு முன் ஈமான் கொண்டோர் அவ்வெற்றிக்குப் பின் ஈமான் கொண்டோரை விடச் சிறந்தவர்கள். அல்லாஹ் கூறுகின்றான்: “உங்களில் (மக்கா) வெற்றிக்கு முன் (நல்வழியில்) செலவு செய்து போரிட்டவருக்கு (உங்களில் யாரும்) சமமாக மாட்டார்கள். (வெற்றிக்குப்) பின்னர் செலவிட்டு போரிட்டவர்களை விட அவர்கள் மகத்தான பதவியுடையவர்கள்”. (ஹதீத் 10). ஸஹாபி என்ற சிறப்பில் மக்கா வெற்றிக்குப் பின் ஈமான் கொண்டோரும்

இணைந்து கொள்வர். ஏனெனில் மேற்கூறிய வசனத்தின் இறுதியில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: *"அனைவருக்கும் அல்லாஹ் அழகியதையே வாக்களித்துள்ளான். நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்". (ஹதீத் 10).*

மேலும் கூறுகின்றான்: *"ஹிஜ்ரத் செய்தோரிலும், அன்ஸார்களிலும் முந்திச் சென்ற முதலாமவர்களையும், நல்ல விஷயத்தில் அவர்களைப் பின் தொடர்ந்தவர்களையும் அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந் திக்கொண்டனர்". (தௌபா 100).*

முந்திக் கொண்டவர்களில் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்டவர்களே சிறந்தவர்கள். அவர்களில் நான்கு கலீபாக்களும் முதன்மையானவர்கள். பின்பு பத்ருப் போரில் பங்கெடுத்தவர்களும், பின் உஹதுப் போரிலும், பின் ஹுதை பியாவில் மரத்துக்குக் கீழ் நபியவர்களுக்கு உறுதிமொழி அளித்தவர்கள். அல்லாஹ் கூறுகின்றான்: *"அந்த மரத்தினடியில் உம்மிடம் உறுதிமொழி எடுத்த போது நம்பிக்கையாளர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களின் உள்ளங்களில் இருப்பதை அவன் அறிவான். அவர்களுக்கு நிம்மதியை அருளி னான். அவர்களுக்குச் சமீபத்தில் இருக்கும் வெற்றியையும் வழங்கினான்." (பத்ஹ் 18).* நபி (ஸல்) அவர்கள் மரத்துக்குக் கீழ் உறுதிமொழி அளித்தவர்களைப் பார்த்து: "நீங்கள்தான் இப்பூமி யில் வசிப்பவர்களில் சிறந்தவர்கள்" என்று கூறியதாக ஜாபிர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (புஹாரி 4154). அச்சமயம் 1400 பேர் இருந்தனர்.

இந்த ஸஹாபாக்கள்தான் வஹீயைச் சுமந்து மார்க்கத்தை பரவச் செய்தவர்கள். அவர்களைக் குறை கூறுவது இம்மார்க்கத்தின் அறிவிப்பாளர் வரிசையைத் துண்டித்து நபியவர் களின் ஸுன்னாவில் ஐயத்தை ஏற்படுத்தும் செயலாகும். நபியவர்களுக்குப் பிறகு அவர்கள்தான் நம்பிக்கையான பாதுகாப்பாளர்கள். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ மூஸா அல் அஷ்அரீ (ரலி) கூறினார்கள்: "என் தோழர்கள் என் சமுதாயத்தாருக்குப் பாதுகாப்பு ஆவார்கள். என் தோழர்கள் போய்விட்டால் என் சமுதாயத்தாருக்கு வாக்களிக்கப்பட்டது வந்து விடும்". (முஸ்லிம் 2531).

*அவர்கள் தவறே செய்யாமல் பாதுகாக்கப்பட்டவர்கள் அல்லர். அவர்கள் விட்ட சிறு தவறுகளை அவர்களைக் குறை கூறுவதற்குச் சாக்காக எடுத்துக் கொள்ளலாகாது. படிப்பினை, மார்க்க விளக்கங்களுக்காகவன்றி அவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளைப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அது போன்ற சந்தர்ப்பங்களில் கண்ணியத்துடனும் நியாயமான காரணங்களைத் தேடியும் அவ்வரலாற்றை ஆராய வேண்டும். ஏனைய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஸஹாபாக்கள் தமக்குள்ளே முரண்பட்டாலும் (ஒன்றுபட்ட அவர்களை விட) ஸஹாபாக்களே சிறந்தவர்கள். ஏனெனில் அல்லாஹ் அவர்களை நபியவர்களுடன் அழகான முறையில் தோழமை கொள்வதைக் கொண்டு சிறப்பித்துள்ளான். இது சாதாரண இருவருக்கு இடையில் ஏற்படும் தோழமை கிடையாது. அவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு இஜ்திஹாத் அடிப்படையில் அமைந்தவை. அவர்கள் தவறிழைத்தாலும் அதற்காக நன்மை வழங்கப்படுவர். ஆனால் நபியவர்களுடன் முரண்படுவது பெரும் அநியாயம். அதனை விட்டும் அல்லாஹ் அம்மக்களைப் பாதுகாத்து விட்டான். மாறாக அழகான முறையில் அவர்கள் நபியவர்களுடன் சேர்ந்திருந் தார்கள். அதன் காரணமாகவே ஏனையோரை விட சிறப்பிக்கப் பட்டார்கள்.*

*ஸஹாபாக்களுக்கு மத்தியில் ஏற்பட்ட பிளவு ஒரு கதவைப் போன்றது. அவர்களில் ஒருவர் விடயத்தில் அது திறக்கப்பட்டால் மற்றோர் விடயத்திலும் தானாகத் திறந்து கொள்ளும். அதனால்தான் பின்னர் வந்த தாபிஈன்கள் மற்றும் அவர்களைத் துயர்ந்தவர்கள் இவ்விடயத்தில் மௌனம் காத்தார்கள். உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களிடம் உஸ்மான் (ரலி), அலீ (ரலி) பற்றியும், ஜமல், ஸிப்ஃபீன் போர்கள் பற்றியும், அவர்களுக்கு மத்தியில் நடந்தவை பற்றியும் வினவப்பட்டது. அதற்கவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: “அவை இரத்தங்கள். அவற்றை விட்டும் அல்லாஹ் எனது கையைப் பாதுகாத்து விட்டான். அவற்றில் எனது நாவை மூழ்கடிப்பதை வெறுக்கின்றேன்”. (இதனை இப்னு ஸஃத் தனது தபகாதுல் குப்ராவிலும் 5/ 394, இப்னு அஸாகிர் தனது தாரீகு திமிஷ்கிலும் 65/ 133 பதிந் துள்ளனர்.)*

அவர்களுக்குப் பின்னால் வந்த யாரும் அவர்களது முரண்பாடு பற்றி மறுமையில் நிச்சயம் வினவப்பட மாட்டார்கள். மாறாக அவர்களது சிறப்புக்களை உண்மைப் படுத்துவது பற்றித்தான் வினவப்படுவார்கள்.

# பதினைந்தாம் அத்தியாயம்

*குப்ரைத் தவிர ஏனைய பாவங்களை வைத்து யாரையும் நாம் காபிராக்க மாட்டோம்.*

*அந்த குப்ரை ஏற்படுத்தும் பிரதான காரணி அல்லாஹ் வைத் தூற்றுவதாகும்.*

*இது அவனுக்கு இணை கற்பிப்பதை விடக் கொடியது. ஏனெனில் இணைவைப்பவன் அல்லாஹ்வைக் கல்லின் தரத்திற் குத் தாழ்த்தவில்லை. மாறாக கல்லை அல்லாஹ்வின் தரத் திற்கு உயர்த்தியுள்ளான். "உங்களை அகிலத்தின் இறைவனுக்குச் சமமாக்கியபோது அல்லாஹ்வின் மீது ஆணையாக தெளிவான வழிகேட்டில் இருந்தோம்'' என்று அங்கே தர்க்கம் செய்து கொண்டே கூறுவார்கள்". (ஷுஅரா 96-98). ஆனால் அல்லாஹ்வைத் தூற்றுபவன் அவனைக் கல்லை விடத் தாழ்த்தியுள்ளான். எனவே அவனைத் தூற்றுவது ஒரு பெரிய குப்ராகும். ஈமானைப் போன்றே குப்ரிலும் கூடுதல், குறைவு ஏற்படும். அல்லாஹ் கூறுகிறான்: "(மாதத்தின் புனிதத்தை) தள்ளிப்போடுவது (இறை)மறுப்பை அதிகப்படுத்துவதாகும்.". (தௌபா 37). மேலும் கூறுகிறான்: "நம்பிக்கை கொண்டபின் மறுத்து, பின்னர் (இறை) மறுப்பை அதிகமாக்கிக்கொண்டோரின் மன்னிப்பு ஒருக்காலும் ஏற்கப்படாது. அவர்களே வழி தவறியவர்கள்.". (ஆல இம்ரான் 90). எனினும் அதன் கூடுதல் குறைவு என்பது அவனை நரகிலிருந்து வெளியேற்ற மாட்டாது. மாறாக அவனது வேதனை கடுமையாவதிலும், இலகுவாகுவதிலும் தாக்கம் செலுத்தும். அல்லாஹ் கூறுகின்றான்: "(நம்மை) மறுத்து, அல்லாஹ்வின் பாதையை விட்டும் தடுத்தோர் குழப்பம் செய்து வந்ததன் காரணமாக வேதனைக்கு மேல் வேதனையை அவர்களுக்கு அதிகமாக்குவோம்". (நஹ்ல் 88).*

*அல்லாஹ்வோ, ரஸூலோ குறிப்பிட்டுச் சொல்லாத யாரையும் சுவர்க்கவாதி என்றோ, நரகவாதி என்றோ நாம் சான்று பகர மாட்டோம். பொதுவாக விசுவாங்கொண்ட நிலை யில் மரணித்தவர் சுவர்க்கவாதியென்றும், இறைநிராகரிப்பில் மரணித்தவர் நரகவாதியென்றும் சான்று பகருவோம்.*

# பதினாராம் அத்தியாயம்

உண்மையான சுதந்திரம் என்பது அல்லாஹ்வைத்தவிர வேறு யாருக்கும் அடிமையாகாமல் இருப்பதாகும். அல்லாஹ்வுடைய கட்டளையில் இருந்து வெளியேறுவதுதான் சுதந்திரம் என விளங்குவது ஆத்மாவை வணங்குவதும், இச்சைக்கு அடிமையாதலுமாகும். அல்லாஹ் கூறுகின்றான்: *"தனது மனோ இச்சையைத் தனது கடவுளாக்கிக் கொண்டவனைப் பார்த்தீரா? தெரிந்தே அவனை அல்லாஹ் வழிகெடுத்தான். அவனது செவியிலும், உள்ளத்திலும் முத்திரையிட்டான். அவனது பார்வையின் மீது மூடியை அமைத்தான். அல்லாஹ்வுக்குப்பின் அவனுக்கு வழிகாட்டுபவன் யார்? நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா?". (ஜாஸியா 23).*

ஒரு மனிதனுக்குத் தான் நினைத்ததை, - நினைத்த விதத்தில், நினைத்த நேரத்தில் - செய்யவோ, சொல்லவோ முடியுமெனத் தனக்குத் தானே அனுமதித்துக் கொண்டால் அவன் தனது ஆசைக்கும் ஷைத்தானுக்கும் அடிமையென்பதை ஒப்புக் கொள்கின்றான். ஏனெனில் மனிதன் அடிமையாகவே படைக்கப்பட்டுள்ளான். அவன் அல்லாஹ்வுக்கு அடிமையாக இருக்காவிட்டால் வேறு யாருக்காவது அடிமையாக இருந்துதான் ஆக வேண்டும்.

இப்புவியில் ஒரேயொரு மனிதன் மாத்திரம் தான் உள்ளான் என்றால் அல்லாஹ் அவனுக்கு கொலை, அவதூறு, விபச்சாரத்திற்கான தண்டனைகளையோ, பார்வையைத் தாழ்த்துவதையோ, வாரிசுரிமைச் சட்டத்தையோ விதியாக்கி இருக்க மாட்டான். அவனுக்கு விபச்சாரம், வட்டி போன்ற பாவங்களையும் தடுத்திருக்க மாட்டான். அம்மனிதனுடன் சேர்த்து ஏனையோரும் கூட்டாக வாழ்வதால்தான் அல்லாஹ் இவற்றை விதியாக்கியுள்ளான். தனிமனிதனுக்கு இது போன்ற சட்ட

*திட்டங்கள் அவசியமில்லை. அவனுடன் சேர்த்து பிற மனிதர்களின் தொகை அதிகரிக்கும் போதுதான் வாழ்கையின் கட்டுப்பாடும் அதிகரிக்கும். சந்திரன் மாத்திரம்தான் விண்வெளியில் இருந்தால் தற்போதுள்ள ஒழுங்கமைப்பில் அல்லாஹ் நீந்த வைத்திருக்க மாட்டான். சூரியன், புவி, நட்சத்திரங்கள் ஆகியவற்றின் ஓட்டங்களுடன் சேர்ந்ததால்தான் கட்டுப்பாட்டுடன் இதுவும் ஓடுகின்றது. விண்வெளி ஓடங்களின் தொகை அதிகரிக் கும்போது கட்டுப்பாடுகளும் அதிகரிக்கும்.*

*அல்லாஹ் கூறுகின்றான்: "இரவைப் பகலால் அவன் மூடுகிறான். பகல், இரவை வேகமாகத் தொடர்கிறது. சூரிய னையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் தனது கட்டளை யால் கட்டுப் படுத்தினான். கவனத்தில் கொள்க! படைத்தலும், கட்டளையும் அவனுக்கே உரியன. அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ் பாக்கியம் பொருந்தியவன்.". (அஃராப் 54).*

*மேலும் கூறுகின்றான்: "சூரியனால் சந்திரனை அடைய முடியாது. இரவு, பகலை முந்தாது. ஒவ்வொன்றும் (தமக்குரிய) வட்டவரைபில் நீந்திச் செல்கின்றன". (யாஸீன் 40).*

*இஸ்லாமிய சட்டதிட்டங்கள் மார்க்கத்தையும் உலகத் தையும் கட்டப்படுத்தவே வந்துள்ளன. அல்லாஹ்வின் சட்டத் திலிருந்து வெளியேறுவதைத் தனக்கு ஆகுமாக்கிக் கொள்பவன் தண்டனைக்குத் தகுதியாகின்றான்.*

*இஸ்லாத்தில் நுழைவது அவசியமாகும். அதிலிருந்து வெளியேறுவது மதமாற்றமாகும் (ரித்தத்). "உங்களில் தனது மார்க்கத்தை விட்டும் மாறி (ஏக இறைவனை) மறுப்போராக மரணித்தவரின் செயல்கள் இவ்வுலகிலும், மறுமையிலும் அழிந்து விடும். அவர்கள் நரகவாசிகள். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள்". (பகரா 217).*

*நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகின்றார்: "(இஸ்லாத்திலிருந்து) தனது மார்க்கத்தை மாற்றிய வனைக் கொலை செய்யுங்கள்". (புஹாரி 2854).*

*அல்லாஹ்வுக்கு அடிமையாக இருப்பதுதான் படைக்கப்*

*பட்டதன் பிரதான நோக்கம். அதிலிருந்து வெளியேற நினைப்பவன் படைக்கப்பட்ட நோக்கத்தை ஏற்காதவன். அத்துடன் உலக நாடுகள், சட்ட யாப்புக்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளாத மனிதன் அல்லாஹ்வுக்கு அடிமையாவதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கின்றான். இது படைக்கப்பட்ட நோக்கம் பற்றிய அவனது பலவீனத்தை, அல்லது தனது உள்ளத்திலிருந்து அந்நோக்கம் நீங்குவதை மறைமுகமாகப் பறைசாற்றுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்: "ஜின்னையும், மனிதனையும் என்னை வணங்குவதற்காகவே தவிர (வேறு எதற்காகவும்) நான் படைக்கவில்லை". (தாரியாத் 56).*

*மனித, ஜின்களை இவ்வுலகில் தன்னை வணங்குவ தற்காக உருவாக்கிய அதே இறைவன் மறுமையில் விசாரணை செய்து வெகுமதி, தண்டனைகள் வழங்குவதற்காக அவர்களை மீண்டும் உருவாக்குவான்.*

*அல்லாஹ் எமது ஈருலக நிலைகளையும் சீர்படுத்துவானாக.*

*தனது நபிக்கும் அவரைப் பின்பற்றியோருக்கும் அல்லாஹ் சாந்தியும் சமாதானமும் அருள்வானாக.*

IslamHouse.com

IslamHouse-Tamil @IslamHouseTa IslamHouseTa https://islamhouse.com/ta

For more details visit
www.GuideToIslam.com

GUIDE TO ISLAM


contact us :Books@guidetoislam.com

Guidetolslam.org Guidetoislam1 Guidetoislam www.Guidetoislam.com

المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة
هاتف: ٩٦٦١١٤٤٥٤٩٠٠+ فاكس: ٩٦٦١١٤٩٧٠١٢٦+ ص ب: ٢٩٤٦٥ الرياض: ١١٤٥٧
ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH
P.O.BOX 29465 RIYADH 11457 TEL: +966 11 4454900 FAX: +966 11 4970126

# அடிப்படைக் கொள்கையில் சில அத்தியாயங்கள்

இந்நூலானது அஷ்ஷேஹ் அப்துல் அஸீஸ் பின் மர்ஸூக் அத்தரீஃபீ அவர்கள் ஸிரியா மக்களுக்கு எழுதிய ஒரு மடலாகும். இதில் ஒரு முஸ்லிம் அவசியம் அறிந்திருக்க வேண்டிய இறைநம்பிக்கை, இணைவைப்பு, இறைநிராகரிப்பு, தலைவர்களுக்குக் கட்டுப்படல், நபித்தோழர்களின் சிறப்புக்கள் போன்ற இஸ்லாமிய நம்பிக்கையுடன் தொடர்புடைய பலதரப்பட்ட விடயங்களை நூலாசிரியர் விளக்கியுள்ளார். அடிப்படை நம்பிக்கையுடன் தொடர்பான விடயங்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளதால், இது ஸிரியா மக்களுக்கு எழுதப்பட்டாலும் அனைத்து முஸ்லிம்களும் அவசியம் வாசிக்க வேண்டிய பொதுவான ஒரு மடலாகத்தான் இருக்கின்றது.





IslamHouse.com
Osoul Center
www.osoulcenter.com